ISSN: 2582–5518




புதுகை
# வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




திங்கள் ❖ பிப்ரவரி. 05, 2024 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 118 ❖ ரூ.10

### தேச விரோத செயல்களில் நாம் தமிழர் கட்சியினர் ஈடுபட்டதை என்ஐஏ சோதனை

# காட்டுகிறது

## என்ஐஏ அமைப்பு அவர்களது வேலையை சிறப்பாக செய்து கொண்டிருக்கிறார்கள்;மத்திய இணை அமைச்சர் எல்.முருகன்

கோவை: பிப். 5–

நாம் தமிழர் கட்சி நிர்வாகிகள் நாட்டுக்கு எதிராக செயல்பட்டதை தொடர்ந்து கண்காணித்த பிறகே என்.ஐ.ஏ. சோதனை நடத்தப்பட்டது. நாம் தமிழர் கட்சி நிர்வாகிகள் வீடுகளில் சோதனை நடத்திய என்.ஐ.ஏ. அவர்களை கைதுசெய்யவும் நடவடிக்கை எடுத்துள்ளது என்று எல்.முருகன் தெரிவித்துள்ளார்.



கோவை விமான நிலையத்தில் மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவரிடம் நாம் தமிழர் கட்சியினர் வீடுகளில் என்ஐஏ சோதனை நடத்தியிருப்பது குறித்து கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர், "இது மிகப்பெரிய கவலைக்குரிய விசயம். அதாவது தேசத்துக்கு எதிரான ஒற்றுமை அல்லது தேசத்துக்கு எதிரான செயல்களில் நாம் தமிழர் கட்சியினர் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த சோதனை காட்டுகிறது. நாம் தமிழர் கட்சி நிர்வாகிகளான சாட்டை துரைமுருகன், இடும்பாவனம் கார்த்திக் உள்ளிட்டோர் வீடுகளில் வெள்ளிக்கிழமை சோதனை நடத்தப்பட்டது. விடுதலை புலிகளுக்கான ஆயுதக்கடத்தல் தொடர்பான வழக்கில் சோதனை நடத்தப்பட்டதாக என்ஐஏ கூறிய நிலையில் எல்.முருகன் விளக்கம் அளித்துள்ளார்.

தமிழ்நாட்டில் 6 இடங்களில் என்.ஐ.ஏ. நடத்திய சோதனையில் முக்கிய ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தகவல்வெளியாகியுள்ளது. சென்னனை, திருச்சி, கோவை, சிவகங்கை, தென்காசியில் தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் சோதனை மேற்கொண்டதில் பல முக்கிய ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

நாம் தமிழர் கட்சியை சேர்ந்த பிரமுகர்களின் வீடுகளில் என்.ஐ.ஏ. அதிகாரிகள் சோதனை மேற்கொள்ளப்பட்ட நிலையில் சோதனையின்போது லேப்டாப்,8சிம்கார்டுகள், 7 மொபைல் போன்கள் உள்ளிட்டவற்றையும் என்.ஐ.ஏ அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளதாக தெரிவிக்கப் பட்டிருக்கின்றனர். தடை செய்யப்பட்ட அமைப்பின் ஆதரவாளர்களாக செயல்பட்ட விவகாரத்தில் சோதனை நடத்தப்பட்டதாக என்.ஐ.ஏ. அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் நாம் தமிழர் கட்சி நிர்வாகிகள் நாட்டுக்கு எதிராகசெயல்பட்டதை தொடர்ந்து கண்காணித்த பிறகே என்.ஐ.ஏ. சோதனை நடத்தப்பட்டது. நாம் தமிழர் கட்சி நிர்வாகிகள் வீடுகளில் சோதனை நடத்திய என்.ஐ.ஏ. அவர்களை கைதுசெய்யவும் நடவடிக்கைஎடுத்துள்ளது. அந்தவகையில், என்ஐஏ அமைப்பு அவர்களது வேலையை சிறப்பாக செய்து கொண்டிருக்கிறார்கள்.

தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும், அவர்களிடம் சென்று கேள்வி கேட்கும்போது, அவர்கள் தங்களை மிரட்டுவதாகவும், தங்களை காப்பாற்றுங்கள் எனக்கூறும் அலறல் சத்தத்தை நாம் கேட்டிருப்போம். அப்படியான அலறலைத்தான் தவறு செய்தவர்கள் இந்த விவகாரத்தில் செய்து கொண்டுள்ளனர்.



▶ அரிமளம் வடக்கு ஒன்றிய அதிமுக செயலாளரும் ஒன்றியக்குழு துணைத்தலைவருமான கடையக்குடி எஸ்.திலகர் இல்ல புதுமனை புகுவிழாவில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் வீட்டுவசதி வாரியத் தலைவருமான பி.கே.வைரமுத்து மற்றும் தொழில் அதிபரும் புதுக்கோட்டை கம்பன் கழக தலைவருமான எஸ். ராமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்திய போது எடுத்தபடம் அருகில் திலகர் குடும்பத்தார் உள்ளனர்.

## தி.மு.க. தேர்தல் ஒருங்கிணைப்பு குழுவுடன் ஸ்பெயினில் இருந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை

சென்னை, பிப். 5–

தொகுதி நிர்வாகிகளின் கருத்து, தேர்தல் பணிகள் குறித்து ஒருங்கிணைப்பு குழுவிடம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கேட்டறிந்தார்.



நாடாளுமன்ற தேர்தலுக்காக கூட்டணி கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவும், தொகுதி பங்கீடு குறித்து பேசவும், தேர்தல் அறிக்கை தயார் செய்யவும் தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் 3 குழுக்களை அமைத்து உள்ளார்.

அதன்படி தேர்தல் பணிகளை ஒருங்கிணைக்கவும், மேற்பார்வையிடவும் அமைச்சர்கள் கே.என். நேரு, எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, உதயநிதி ஸ்டாலின், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி ஆகியோர் அடங்கிய குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக ஸ்பெயின் நாட்டிற்கு அரசு முறை பயணம் மேற்கொண்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், தி.மு.க. தேர்தல் ஒருங்கிணைப்பு குழுவுடன் ஸ்பெயினில் இருந்து காணொலி மூலம் ஆலோசனை நடத்தினார்.

தொகுதி நிர்வாகிகளின் கருத்து, தேர்தல் பணிகள் குறித்து ஒருங்கிணைப்பு குழுவிடம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கேட்டறிந்தார். இந்த ஆலோசனை கூட்டத்தில், அமைச்சர்கள் கே.என். நேரு, தங்கம் தென்னரசு, எ.வ.வேலு உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### நாடாளுமன்ற தேர்தலில் தொகுதிப் பங்கீடு தொடர்பாக

## திமுக மார்க்சிஸ்ட் இடையேயான பேச்சு வார்த்தை சுமுகமாக நடைபெற்றது : மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி

சென்னை : பிப். 5–

பேச்சுவார்த்தை சுமூகமாக இருந்தது என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பேட்டி அளித்துள்ளது. கடந்த முறை கோவை, மதுரை தொகுதிகளில் போட்டியிட்டு வெற்றி பெற்ற நிலையில் கூடுதல் தொகுதிகளைக் கேட்டுப் பெற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் திமுகவிடம் கோரிக்கை வைத்துள்ளோம் என்று தெரிவித்துள்ளனர்.



நடப்பாண்டு ஏப்ரல்–மேமாதங்களில் நடைபெற உள்ள நாடாளுமன்ற மக்களவைத் தேர்தலுக்கான பணிகளை அரசியல் கட்சிகள் தீவிரப்படுத்திவருகின்றன. இதனடிப்படையில் திமுக கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு தலைமையில் அமைக்கப்பட்ட குழுவில் அமைச்சர்கள் கே.என். நேரு, ஐ.பெரியசாமி, எம். ஆர்.கே.பன்னீர்செல்வம், நாடாளுமன்ற உறுப்பினர்களான திருச்சி சிவா, ஆ.ராசா மற்றும் பொன்முடி ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

நாடாளுமன்ற மக்களவைத் தேர்தல் தொகுதி பங்கீடு குறித்து திமுகவுடன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பேச்சு வார்த்தை நடத்தியது. சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற இந்த பேச்சுவார்த்தையில் பி.சம்பத், பெ.சண்முகம், க.கனகராஜ், என். குணசேகரன் ஆகியோர் கொண்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகிகள் பங்கேற்றனர்.

பேச்சுவார்த்தை முடிந்த பின்பு செய்தியாளர்களை சந்தித்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் பி.சம்பத் கூறியதாவது; "நாடாளுமன்ற தேர்தலில் தொகுதிப் பங்கீடு தொடர்பாக திமுக மார்க்சிஸ்ட் இடையேயான பேச்சு வார்த்தை சுமுகமாக நடைபெற்றது. கடந்த முறை கோவை, மதுரை தொகுதிகளில் போட்டியிட்டு வெற்றி பெற்ற நிலையில் கூடுதல் தொகுதிகளைக் கேட்டுப் பெற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் திட்டம்.

கடந்த முறை போட்டியிட்டதை விட கூடுதல் தொகுதிகளை கேட்டு உள்ளோம். எங்களது முடிவை கூட்டணி தலைமையிடம் கூறியுள்ளோம். முதல்வர் ஸ்பெயினில் இருந்து திரும்பி வந்தவுடன் தொகுதி குறித்த உடன்பாடு ஏற்படும் என்று நம்பிக்கையுள்ளது" என திமுக தொகுதிப் பங்கீட்டு குழுவுடன் பேச்சுவார்த்தைக்கு பின் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் பி.சம்பத் பேட்டியளித்தார்.

## எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அணிக்கு பதிலடி கொடுக்க வேண்டும் – ஓ.பன்னீர்செல்வம்

நாகர்கோவில் : பிப். 5–

நாகர்கோவிலில் ஓ.பி.எஸ். அணி சார்பில் பாராளுமன்ற தேர்தல் குறித்த ஆலோசனைக் கூட்டம் நேற்று நடந்தது. மாவட்ட செயலாளர்கள் பி.டி.செல்லப்பன், எஸ்.ஏ. விக்ரமன் ஆகியோர் தலைமை தாங்கினர். துணை ஒருங்கிணைப்பாளர் மனோஜ் பாண்டியன் வாழ்த்துரை வழங்கினார்.



முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு பேசினார். அப்போது அவர் பேசியதாவது:- 1972–ம் ஆண்டு அ.தி.மு.க. இயக்கம் எம். ஜி.ஆரால் உருவாக்கப்பட்டது. தொண்டர்கள் இயக்கமாக இந்த இயக்கம் உருவாக்கப்பட்ட பிறகு புரட்சித்தலைவி அம்மா மக்கள் இயக்கமாக இந்த இயக்கத்தை மாற்றி காட்டினார். புரட்சித்தலைவர் எம். ஜி.ஆரால் உருவாக்கப்பட்டு தொடங்கப்பட்ட போது 16 லட்சம் தொண்டர்களை கொண்ட இயக்கமாக இருந்த இந்த இயக்கம், ஜெயலலிதா பொதுச் செயலாளரான பிறகு ஒன்றரை கோடி தொண்டர்கள் கொண்ட இயக்கமாக மாறியது.

எந்த கொம்பனாலும் அசைக்க முடியாத மாபெரும் இயக்கமாக இந்த இயக்கம் உருவாக்கப்பட்டது. குமரி மாவட்டம் கல்வி அறிவு மிகுந்த மாவட்டமாகும். கல்வியில் முத்திரை பதித்த மாவட்டமாக இந்த மாவட்டம் விளங்கி வருகிறது. யாரும் உங்களை பேச்சு மூலமாக ஏமாற்ற முடியாது என்பதை தேர்தல் மூலமாக நிரூபித்து வருகிறீர்கள். பொதுச் செயலாளரை தேர்வு செய்வதற்கு சட்ட விதிகளை மாற்ற முடியாது என்று எம்ஜிஆர் கூறினார். தொண்டர்கள் மூலமாகத் தான் பொதுச்செயலாளரை நியமனம் செய்ய முடியும் என்ற நிலை இருந்தது. அதை தற்போது எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் மாற்றிக் காட்டி உள்ளார்.

எடப்பாடி பழனிச்சாமி கொஞ்சம் கொஞ்சமாக தனது நயவஞ்சகத்தால் இயக்கத்தை அழித்து வருகிறார். அம்மா மறைவிற்கு பிறகு கழக ஒருங்கிணைப்பாளர் என்று பதவி உருவாக்கப்பட்டது. 2021–ம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்த பதவி 2026 வரை சட்ட விதிப்படி செல்ல வேண்டும். ஆனால் எடப்பாடி பழனிச்சாமி ஒற்றை தலைமை வேண்டும் என்று கூறி பொதுச்செயலாளர் பதவியை உருவாக்கினார். அம்மா அவர்களுக்கு மரியாதை செய்யும் வகையில் நிரந்தர பொதுச் செயலாளர் என்ற பதவி யாருக்கும் வழங்கப்படவில்லை. சர்வாதிகாரமாக தான் தோன்றித்தனமாக எடப்பாடி பழனிச்சாமி செயல்பட்டார்.

அம்மா மறைவிற்கு பிறகு எடப்பாடி பழனிச்சாமி எப்படி முதலமைச்சர் ஆன ஆனார் என்று எல்லோருக்கும் தெரியும். தவழ்ந்து தவழ்ந்து சென்று பதவியை பெற்றுக் கொண்டார். சின்னமாவை இழிவாக பேசினார். எடப்பாடி பழனிச்சாமி பொறுப்பேற்ற பிறகு ஊராட்சி தேர்தல், உள்ளாட்சி தேர்தல், பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி தேர்தல் மட்டும் இன்றி இடைத்தேர்தலிலும் அ.தி.மு.க. படுதோல்வி அடைந்துள்ளது.

ஈரோட்டில் நடந்த இடைத்தேர்தலில் அ.தி. மு.க. தோல்விக்கு எடப்பாடி பழனிச்சாமி தான் முக்கிய காரணமாக இருந்தார். அவர் பொது செயலாளர் பதவியை தற்காலிக தீர்ப்பின் மூலம் தான் பெற்றுள்ளார். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். என்ன சட்ட திருத்தத்தை கொண்டு வந்தாரோ, அதேபோல் மீண்டும் தொண்டர்களே பொதுச் செயலாளரை தேர்வு செய்ய முடியும் என்பதை கொண்டு வருவதற்காக தான் தர்ம யுத்தம் நடத்தப்பட்டு வருகிறது.

அ.தி.மு.க. என்ற மாபெரும் இயக்கத்தை யாராலும் அழிக்க முடியாது. அதை காப்பாற்ற தான் போராடி வருகிறோம். தேர்தல் நேரங்களில் அம்மா இருக்கும்போது பல கட்சிகள் அவரைத் தேடி வருவார்கள். ஆனால் தற்பொழுது தலைமை கழகத்தில் 6 பேர் உட்கார்ந்து இருக்கிறார்கள். யாரும் அவர்களை தேடி வரவில்லை. அ.தி.மு.க. என்னும் கட்சியை எடப்பாடி பழனிசாமி தாத்தாவோ பன்னீர்செல்வத்தின் தாத்தாவோ உருவாக்கவில்லை. எம். ஜி.ஆர். உருவாக்கிய கட்சி என்பதை புரிந்து கொள்ள வேண்டும். தொண்டர்கள் கூட முதலமைச்சராக வர வாய்ப்புள்ளது.

விருதுநகரில் நடந்த தேர்தலில் பெருந்தலைவர் காமராஜர் வெற்றி வாய்ப்பு இழந்தார். பின்னர் அவர் கன்னியாகுமரி மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். காமராஜரை வெற்றி பெற வைத்த மண் இந்த மண்ணாகும். அ.தி. மு.க. தொண்டர்களுக்கு எடப்பாடி பழனிச்சாமி தீங்கு செய்து வருகிறார். பொதுச்செயலாளர் பதவிக்கு 10 மாவட்ட செயலாளர்கள் முன்மொழிய வேண்டும். 10 மாவட்ட செயலாளர்கள் வழிமொழிய வேண்டும் என்று கூறியுள்ளார்கள்.

அப்படி என்றால் வேலுமணியும், தங்கமணியும் தான் பொதுச் செயலாளராக வர முடியும். கழகத்தை சிதைத்து சின்னாபின்னமாக்கி கொண்டிருக்கிறார்கள். பாராளுமன்ற தேர்தலில் எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அணிக்கு நீங்கள் தக்க பதிலடி கொடுக்க வேண்டும். 9 முறை தோல்வியை சந்தித்த அவர்களுக்கு பத்தாவது முறையும் தோல்வியை நீங்கள் வழங்க வேண்டும். நாம் தேர்தலை சந்திக்க முழு பலத்துடன் தயாராகி வருகிறோம். பூத் கமிட்டி அமைக்க வேண்டும். தமிழகத்தில் 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பூத்துகள் உள்ளது. ஒரு பூத்துக்கு 18 முதல் 25 பேரை அமர வைக்க வேண்டும். மீண்டும் அம்மா ஆட்சியை கொண்டுவர நாம் போராட வேண்டும் என்று முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் பேசினார். கூட்டத்தில் கலந்து கொண்ட பன்னீர்செல்வத்திற்கு ஆளுயர மாலை அணிவிக்கப்பட்டது. நிர்வாகிகள் வீரவாள் பரிசு வழங்கினார்கள்.

## பா.ஜ.க. இல்லாத மற்ற கட்சிகளுடன் தேர்தல் கூட்டணி: ஜெயக்குமார்

சென்னை : பிப். 5–

தேர்தல் அறிக்கை தொடர்பாக மக்களை சந்தித்து கருத்துக் கேட்க உள்ளதாக அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கூறியுள்ளார்.



சென்னை ராயப்பேட்டையில் உள்ள அதிமுக தலைமை அலுவலகத்தில் அ.தி. மு.க.வின் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவின் 2–வது ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. ஆலோசனைகூட்டத்திற்கு பிறகு ஜெயக்குமார் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது :- நாடாளுமன்றத்தேர்தல் கூட்டணிக்கு பா.ஜ.க. இல்லாத கட்சிகளை வரவேற்கிறோம். கூட்டணிக்கு பெரிய கட்சிகள் பல பேசிக்கொண்டிருக்கின்றன. சிறப்பாக தேர்தல் அறிக்கையை தயாரிப்பதற்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளோம்.

தேர்தல் அறிக்கை தொடர்பாக மக்களை சந்தித்து கருத்துக் கேட்க உள்ளோம். இன்று வேலூர் மண்டலம், நாளை விழுப்புரம் மண்டலத்தில் மக்களை சந்திக்கிறோம் என்று அவர் கூறினார்.

# இன்று

# 5-2-2024

கும்பகோணம் சக்கரபாணி கோயில் – சகல தோஷங்களும் நீங்கும்.
சக வருடம் 1945 மாகம் 16

| | | | |
|---|---|---|---|
| சோபகிருது தை 22 | FEB - MON திங்கள் | ரஜப் 24 தேய்பிறை 036 / 330 | இராசிபலன் |

தேய். தசமி 16.49 (மா. 01.20) கேட்டை 54.13 (கா. 04.17) தியாஜ் 27.52 சித்த 54.13 மேல் அமிர்த. திருமயம் ஸ்ரீஆண்டாள் பிரியாவிடை உற்சவம். எண்ணெய்காப்பு உற்சவாரம்பம். வேதாரண்யம் ஸ்ரீசிவபெருமான் விழா தொடக்கம். சிறிய நகசு.

| | நல்லநேரம் | கௌ.நு.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 6.30-7.30 | 9.30-10.30 | 07.30 | 01.30 | 10.30 |
| மாலை | 4.30-5.00 | 7.30-8.30 | 09.00 | 03.00 | 12.00 |

சூலம் : கிழக்கு; பரிகாரம் : தயிர்; மகர லக்கனம் இருப்பு நா. 1 வி. 27; சந்திராஷ்டமம் பரணி
கரணம் : 9-10.30; சூரிய உதயம் : 6.36
ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு

இராசிபலன்: மேஷம் - வெற்றி; ரிஷபம் - நிம்மதி; மிதுனம் - புகழ்; கடகம் - போகம்; சிம்மம் - பெருமை; கன்னி - பேராசை; துலாம் - தேர்ச்சி; விருச்சி - தாமதம்; தனுசு - லாபம்; மகரம் - மேன்மை; கும்பம் - அசதி; மீனம் - ஜெயம்

## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# புதுக்கோட்டை யூரோ கிட்ஸ் மழலையர் பள்ளியில் விளையாட்டு விழா



புதுக்கோட்டை : பிப். 5–

புதுக்கோட்டை மறைமலை நகரில் உள்ள யூரோ கிட்ஸ் மழலையர் பள்ளியில் விளையாட்டு விழா மாவட்ட விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

விழாவுக்கு, பள்ளியின் தாளாளர் கவிஞர் ஆர்.எம். வீகதிரேசன் தலைமை வகித்தார். பள்ளியின் சென்டர் ஹெட் தேவி கீர்த்தனா வரவேற்றார்.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட மாவட்ட விளையாட்டு அலுவலர் செந்தில்குமார் விளையாட்டு போட்டியை தொடக்கி வைத்தார். பின்னர் மாவட்ட விளையாட்டு அலுவலர் செந்தில்குமார் ஒலிம்பிக் தீபம் ஏற்றி மழலையரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். யோகா, ஓட்டப்பந்தயம், பந்து எறிதல் உள்ளிட்ட போட்டிகளில் குழந்தைகள் மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிப் படுத்தினார்கள்.

மேலும் பெற்றோர்களுக்கான பல்வேறு போட்டிகள் நடந்தது. போட்டிகளில் பங்கு பெற்ற அனைத்துக்குழந்தைகளுக்கும், பெற்றோர்களுக்கும் பரிசு, நற்சான்றிதழ்களை வழங்கி வாழ்த்தினார். நிகழ்வில், ஸ்ரீ வெங்கடேஸ்வரா பள்ளி முதல்வர் கவிஞர் தங்கம்மூர்த்தி, இந்திய மருத்துவ சங்கத்தின் நிதிச்செயலாளர் டாக்டர் கோபாலகிருஷ்ணன் மற்றும் மருத்துவர்கள், கல்வியாளர்கள், சமூக ஆர்வலர்கள் விளையாட்டுத்துறை பயிற்சியாளர்கள், யூரோ கிட்ஸ் மழலையர்களின் பெற்றோர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். விழா ஏற்பாடுகளை பள்ளி ஆசிரியைகள் சிறப்புடன் செய்தனர்.

# அமலாக்கத்துறை என் வீட்டு கதவை தட்டவே வேண்டாம்' அண்ணாமலைக்கு அமைச்சர் துரைமுருகன் பதிலடி



வேலூர் : பிப். 5,

அமலாக்கத்துறை என் வீட்டு கதவை தட்ட வேண்டாம், கதவை திறந்தே வைத்திருக்கிறேன் என அண்ணாமலைக்கு அமைச்சர் துரைமுருகன் பதிலடி தந்துள்ளார்.

வேலூரில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது நடிகர் விஜய் புதிய அரசியல் கட்சி தொடங்கியிருப்பது பற்றி செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்குப் பதில் அளித்த துரை முருகன், "யார் வேண்டுமானாலும், கட்சியை ஆரம்பிக்கலாம். யார் எந்த கட்சியில் வேண்டுமானாலும் சேரலாம்" என்று தெரிவித்தார்.

மேலும், பாஜக மாநில தலைவர் அண்ணாமலை 'என் மண் என் மக்கள்' நடைபயணத்தின் போது, கே.வி. குப்பத்தில் பேசுகையில், "அமலாக்கத்துறை வேலூர் எம்.பி கதிர் ஆனந்த் வீட்டின் கதவை விரைவில் தட்டும்" எனக் கூறியிருந்தார். இதுகுறித்து அமைச்சர் துரைமுருகனிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்குப் பதிலளித்த அமைச்சர், அவர்கள் என் வீட்டுக் கதவைத் தட்ட வேண்டாம். அந்த கஷ்டம் கூட அவர்களுக்கு வேண்டாம், கதவைத் திறந்தே வைத்திருக்கிறேன் என்றார்.

பொருளாதாரத்தில் தமிழகம் பின்தங்கி உள்ளதாக அண்ணாமலை கூறியது குறித்துக் கேட்டதற்கு, "அவர் என்ன பொருளாதார நிபுணரா? பெரிய பெரிய வல்லுனர்களே எங்களுக்குச் சான்றிதழ் கொடுத்திருக்கிறார்கள். மேலும், மக்களவைத் தேர்தல் தொடர்பான கூட்டணி குறித்து எழும் வதந்திகளுக்கு எல்லாம் நான் பதில் சொல்ல முடியாது. துரைமுருகன் சொன்னதாகக் கூறி எதையாவது ஒன்று போட்டு குட்டையைக் குழப்பி, கிளப்பி விடுவீர்கள். அதனால், கூட்டணி குறித்து அவ்வப்போது அறிவிப்புகள் வரும்" என்று தெரிவித்தார்.



▶ புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் அருகே பிரசித்தி பெற்ற காவல் தெய்வமாக விளங்கி வரும் பொற்றனைக்கோட்டை முனீஸ்வரர் கோவிலில் உள்ள 9 அடி உயர பொற்பனை முனீஸ்வரருக்கு தை மாத ஞாயிற்றுக்கிழமையை முன்னிட்டு பால் தயிர் சந்தனம் உள்ளிட்ட ஒன்பது வகையான பொருட்களைக் கொண்டு அபிஷேக ஆராதனை நடைபெற்று. கோவில் ரங்கசாமி பூசாரி மகா தீபம் காட்டி வழிபாடு நடைபெற்றது. திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

# பேறிஞர் அண்ணா நினைவு தினத்தை முன்னிட்டு சங்கரன்கோவில் சங்கர நாராயண சுவாமி கோயிலில் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து



சங்கரன்கோவில் : பிப். 5–

முன்னாள் முதல்வர் அறிஞர் அண்ணாவின் 55 வது நினைவு தினத்தை முன்னிட்டு தமிழக அரசின் அறநிலைத்துறை சார்பில் சங்கரன்கோவில் சங்கரநாராயண சுவாமி கோயிலில் சிறப்பு வழிபாடுகள் மற்றும் பொது விருந்து நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு இணை ஆணையர் அன்புமணி தலைமை வகித்தார். சங்கரன்கோவில் யூனியன் சேர்மன் லாலாசங்கரபாண்டியன், சங்கரநாராயண சுவாமி கோயில் துணை ஆணையர் (பொ) வெங்கடேசன், திமுக நகர செயலாளர் பிரகாஷ் முன்னிலை வகித்தனர். இதில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ கலந்துகொண்டு பேரறிஞர் அண்ணாவின் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். தொடர்ந்து பொது விருந்தில் பொதுமக்களுடன் சேர்ந்து உணவருந்தினார்.

அதனைத் தொடர்ந்து அறநிலையத்துறை சார்பில் பெண்களுக்கு சேலை மற்றும் ஆண்களுக்கு வேஷ்டிகள் வழங்கப்பட்டது நிகழ்ச்சியில் சங்கரன்கோவில் யூனியன் துணை சேர்மன் செல்வி, திமுக நகர செயலாளர் பிரகாஷ், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் உதயகுமார், விவசாய அணி துணை அமைப்பாளர்கள் கருப்பசாமி, முருகராஜ், வீரிருப்பு பஞ்சாயத்து தலைவர் சண்முகராஜ், ஜெயா, ஜெயக்குமார், செந்தில் மற்றும் கோயில் ஊழியர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# 'பாரத் மாதா கி ஜே' கோஷம் எழுப்பாத கூட்டம் மேடையிலேயே ஆவேசமான மத்திய அமைச்சர்




கோழிக்கோடு : பிப். 5–

கேரளாவில் நடைபெற்ற கூட்டத்தில் 'பாரத் மாதா கி ஜே' கோஷம் எழுப்பாததால் கோபமடைந்த மத்திய அமைச்சர் மீனாட்சி லேகி, இந்த கோஷத்தை எழுப்ப தயங்குபவர்கள் அரங்கை விட்டு வெளியேறுங்கள் என ஆவேசமாக கூறியது பரபரப்பை உருவாக்கியுள்ளது.

கேரள மாநிலம் கோழிக்கோடில் நேரு யுவ கேந்திரா மற்றும் வலதுசாரி அமைப்புகள் இணைந்து இளைஞர் மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தன. இந்த மாநாட்டை துவங்கிவைத்து உரையாற்றிய மத்திய வெளியுறவு மற்றும் கலாசார துறை இணை அமைச்சர் மீனாட்சி லேகி, "கேரள ஆளுநர் ஆரிப் முகமது கான் எனது மனம் கவர்ந்த தலைவர்களில் ஒருவர். இதற்கு காரணம் ராஜீவ் காந்தி மந்திரிசபையில் அவர் ராஜினாமா செய்தது மற்றும் ஷாபானு வழக்கில் முத்தலாக்கை தடுத்து நிறுத்த வலியுறுத்தியதே காரணமாகும்.

அப்போது நான் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன். தற்போது முத்தலாக் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டுவிட்டது. பிரதமர் மோடியின் வாக்குறுதி மக்களுக்கான வாக்குறுதியாகும். அதனால்தான் பல்வேறு நலத்திட்டங்களை விரைவாக ஊழல் இன்றி செயல்படுத்த முடிந்தது" என தெரிவித்தார்.

மீனாட்சி லேகி தனது பேச்சை முடித்த பின்னர் இரு கைகளையும் உயர்த்தி, 'பாரத் மாதா கி ஜே' என முழக்கம் எழுப்பினார். ஆனால் அவர் எதிர்பார்த்த அளவு இளைஞர்கள் தரப்பில் இருந்து பதில் கோஷம் வரவில்லை. இதனால் கோபமடைந்த அவர், பாரதம் உங்கள் தாய் இல்லையா, அதில் சந்தேகம் உள்ளதா, உற்சாகத்தை வெளிப்படுத்த வேண்டாமா என கூறி அதே முழக்கத்தை திரும்பவும் சொன்னார்.

அப்போதும் கூட்டத்தில் ஒரு பகுதியினர் அமைதியாக இருந்தனர். இதனால் கோபமடைந்த அமைச்சர், 'ஏன் இந்த அணுகுமுறை?. தேசத்தைப் பற்றி பெருமிதம் கொள்ளாதவர்கள் இளைஞர் மாநாட்டில் பங்கேற்க வேண்டிய அவசியமில்லை.பாரத் மாதா கீ ஜே என கோஷம் எழுப்ப தயங்குபவர்கள் அரங்கை விட்டு வெளியேறுங்கள்' என கூறினார். இந்த சம்பவம் அங்கே பெரும் பரபரப்பை உருவாக்கியது.



▶ மதுரை செக்காணுரனி அருகில் ஜெயஸ்ரீ மஹாலில், மதுரை தெற்கு மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் அய்யாக்கண்ணு, பாண்டியராஜன் இல்ல விழாவிற்கு தி.மு.க. அமைச்சர் பெருமக்கள் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், கிராம பொதுமக்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

# அரியலூரில் டிடோ ஜாக் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்



அரியலூர், பிப். 5–

அரியலூரில் டிடோ ஜாக் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு தொடக்கக்கல்வி ஆசிரியர் இயக்கங்களின் கூட்டு நடவடிக்கை குழு, டிடோ ஜாக் அமைப்பின், அரியலூர் வட்டார மற்றும் மாவட்ட அமைப்பு சார்பில், அரியலூர் பேருந்து நிலையம் அருகே நடைபெற்ற கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்கு, சங்கத்தின் அரியலூர் மாவட்ட செயலாளர் எழில் தலைமை வகித்தார். அரியலூர் வட்டார செயலாளர் சண்முகம் வரவேற்று பேசினார்.

தொடக்க கல்வி ஆசிரியர்களை பெரிதும் பாதிக்கும், அரசாணை எண் 243 ஐ திரும்ப பெற வேண்டும். பேச்சுவார்த்தையின் போது ஏற்றுக் கொள்ளப்பட்ட 12 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என, தமிழக அரசை வலியுறுத்தி, அரியலூரில் நடைபெற்ற கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில், சங்கத்தின் மாநிலத் தலைவர் நம்பிராஜன் சிறப்புரை ஆற்றினார். அதில் வருகிற 19-ம் தேதி சென்னையில் மாநில அளவில் நடைபெறும் உண்ணாவிரதப் போராட்டத்தில், பெருந்திரளாக பங்கேற்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில், ஆசிரியர் சங்கப்பிரதிநிதிகள் பாண்டியன், வேலுசாமி, வேல்முருகன் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# அரியலூர் மெய் மாண்டசெரி பள்ளியில் திருக்குறள் போட்டி




அரியலூர் : பிப். 5–

அரியலூர் மெய் மாண்டசெரி பள்ளியில் திருக்குறள் போட்டி நடைபெற்றது.

அரியலூர் மெய்யப்ப செட்டியார் ஜுவல்லரி மற்றும் தவுத்தாய் குளம் மெய் மாண்டசெரி பள்ளி நிர்வாகம் இணைந்து நடத்திய திருக்குறள் போட்டி, அரியலூர் அருகே தவுத்தாய்குளம் மெய் மாண்டசெரி பள்ளியில் நடைபெற்றது. அரியலூரை சேர்ந்த ஆர்.தியாகராஜன் செட்டியார் தலைமையில் நடைபெற்ற இப்போட்டிகளின் நடுவர்களாக, அரியலூர் ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் புலவர் சி.இளங்கோ, லிங்கத்தடிமேடு வள்ளலார் கல்வி நிலைய தலைமையாசிரியர் சௌந்தர்ராஜன், ராமசாமி ஆசிரியர், ஓய்வு பெற்ற பள்ளி ஆசிரியை மங்கையர்க்கரசி மற்றும் நித்தியபிரியா, தர்ஷினி, ஆகியோர் செயல்பட்டனர். மெய் மாண்டசெரி பள்ளியின் தாளாளர் சுமதி வரவேற்று பேசினார்.

அரியலூர் கோல்டன் கேட் பள்ளி, லிங்கத்தடிமேடு வள்ளலார் கல்வி நிலையம், திருமழபாடி கலைமகள் பள்ளி, கீழப்பழுவூர் விநாயகா பள்ளி, மற்றும் ஓ.கூத்தூர், ஆண்டிபட்டாக்காடு சிறுவளூர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி உள்ளிட்ட பள்ளிகளை சேர்ந்த, 50-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பங்கேற்ற, திருக்குறளின் இரண்டு அதிகாரங்களில், விளக்க உரையுடன் கூடிய குறள்கள் மற்றும் திருக்குறள் சார்ந்த கதை ஒப்பிக்கும் போட்டி நடைபெற்றது.

அதில் முதல் மற்றும் இரண்டு கட்டங்களாக தேர்வு பெற்ற நான்கு மாணவ, மாணவிகளுக்கான பரிசு, சான்றிதழ் வழங்கப்பட்டது. மேலும் திருக்குறள் போட்டியில் பங்கேற்ற அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் ஆறுதல் பரிசுகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் ஜெயஷீலா, பிரியங்கா மற்றும் சிறுவளூர் பள்ளி ஆசிரியர் செவ்வேள் உள்ளிட்ட ஆசிரியர்கள் மாணவ, மாணவிகள் பலர் கலந்து கொண்டனர். முடிவில் ஆர்.தியாகராஜன் நன்றி கூறினார்.

## புதுக்கோட்டை பேக்கரி மஹராஜ் நிறுவனத்தின்

# தானியங்கி உணவுப்பொருள் வழங்கும் மெஷின் மருத்துவக்கல்லூரியில் வைக்க சமூக ஆர்வலர்களின் கோரிக்கை



புதுக்கோட்டை , பிப். 5–

புதுக்கோட்டை பேக்கரி மஹராஜ் நிறுவனத்தின் தானியங்கி உணவுப்பொருள் வழங்கும் மெஷின் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் புதுக்கோட்டை மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் தொடங்க வேண்டும் என்ற கோரிக்கை சமூக ஆர்வலர்களால் வைக்கப்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்ட மக்களின் முழு நம்பிக்கையை பெற்ற நிறுவனமான அறமனச் செம்மல் தெய்வத்திரு சீனு சின்னப்பா அவர்களால் தொடங்கப்பட்ட பேக்கரி மஹராஜ் நிறுவனத்தின் அனைத்து தயாரிப்புகளும் சாமானிய மக்களை எந்த நேரத்திலும் எளிதில் கிடைத்திடும் வகையில் ரூபாய் 5 லட்சம் மதிப்பிலான தானியங்கி இயந்திரம் ஒன்று கடந்த ஒரு வருடத்திற்கு முன்பாக பேக்கரி மஹராஜ் நிறுவனத்தின் தலைமை அலுவலகமான மார்த்தாண்டபுரத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

தங்களுக்கு உணவு கிடைக்காத சிக்கலான நேரத்தில் அந்த மிஷினை பொதுமக்களில் பலர் பயன்படுத்திக்கொண்டு தங்களின் தேவையை பூர்த்திசெய்துக்கொண்டு வருகின்றனர். மெஷின் வைத்த ஆரம்பத்தில் நாள் ஒன்றுக்கு ஒரு முறை மட்டுமே டாப் ஆப் செய்த நிறுவனம் தற்பொழுது இரவு நேரங்களில் இரண்டு, மூன்று முறை வரை டாப் ஆப் செய்ய வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. அந்த அளவிற்கு மெஷின் முக்கியத்துவம் பயன்பாடு பொதுமக்களிடையே வரவேற்பு பெற்றுள்ளது. இருப்பினும் இந்த மெஷின் பொதுமக்கள் அதிகம் சங்கமிக்க கூடிய இடங்களில் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை பொதுமக்கள் சமீபகாலமாக சமூக ஆர்வலர்களால் வைக்கப்பட்டு வருகிறது அது நம்முடைய கள ஆய்விலும் தெரிய வந்துள்ளது.

அந்தவகையில்சாமானிய ஏழை எளியோர் அதிகம் கூட கூடிய புதுக்கோட்டை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இத்தகைய தானியங்கி இயந்திரம் அமைக்கப்பட்டால் பொதுமக்களுக்கும் ஏழை எளியோருக்கும் குறைந்த விலையில் தரமான உணவுப் பொருட்களான பிரட் பாக்கெட், பன்,ரஸ்க் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகள் நோயாளிகளுக்கு கிடைக்க ஏதுவாக அமையும் பொது மக்களின் எதிர்பார்ப்பு குறித்து புதுகை வரலாறு சார்பில் பேக்கரி மஹராஜ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் அருண்ராஜ் சின்னப்பா அவர்களை சந்தித்து பொதுமக்களின் எதிர்பார்ப்பு குறித்து தெரிவித்த போது அவர் கூறுகையில்;

பொதுமக்கள் தங்களையும் தொடர்ந்து வலியுறுத்தி வருவதாகவும் பொது மக்களின் தேவையை பூர்த்தி செய்ய தாங்கள் தயாராக இருப்பதாகவும் அதே வேளையில் மாவட்ட நிர்வாகம் விருப்பப்பட்டு எங்களுக்கு அனுமதி அளித்தால் ரூபாய் 5 லட்ச ரூபாய்மதிப்பிலான தானியங்கி இயந்திரத்தை எங்களின் சொந்த செலவில் அங்கு அமைத்து நோயாளிகளுக்கும் பொதுமக்களுக்கும் அத்தியாவசிய தேவையான பொருட்களான பிரட், பன், ரஸ்க் பாக்கெட்களை வைத்து பராமரிக்க தாங்கள் தயாராக இருப்பதாக அவர் தெரிவித்தார்.

மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் தனியாரால் நடத்தப்பட்டு வரும் கேண்டின்களில் விற்கப்படும் பொருள்களின் விலை கடைவீதிகளில் உள்ள விலையை விட கூடுதல் விலை வைத்து விற்கப்படுவதால் நோயாளிகள் மட்டுமின்றி அவர்களது உறவினர்களும் பசியும் பட்டினியுமாகவே பாதி நாட்களைக் கடக்க வேண்டிய சூழலில் உள்ளனர். இது மருத்துவக் கல்லூரி நிர்வாகத்திற்கும் நன்கு தெரியும் மக்களின் நலன் கருதி சமூக ஆர்வலர்கள் கோரிக்கையை கருத்தில் கொண்டு குறைந்த விலையில் உடனுக்குடன் தயாரிக்கப்படும் பேக்கரி மஹராஜ் நிறுவனத்தின் தயாரிப்புகளையோ அல்லது மாவட்ட நிர்வாகமே ஒரு தானியங்கி இயந்திரத்தை மருத்துவகல்லூரி மருத்துவமனைக்காக ஏற்பாடு செய்து அதில் தரமான உணவுபொருட்களை பொதுமக்கள் மற்றும் மருத்துவ மாணவர்கள், நோயாளிகள் அனைவரும் பயன்பெறும் வகையில் ஏற்படுத்தித் தர வேண்டும் என்பது புதுகை வரலாறு எதிர்பார்ப்பு.

# இந்தியாவில் முதல் முறையாக சீர்காழி தனியார் பள்ளியில் இருந்து செலுத்தப்பட்ட விண்கலம்

## ஒரு லட்சம் அடி உயரம் சென்று விண்ணில் ஆய்வு



சீர்காழி, பிப். 5-

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் செயல்பட்டு வருகிறது சுபம் வித்யா மந்திர் தனியார் பள்ளி. இப்பள்ளியில் ஒவ்வொரு ஆண்டும் விண்வெளி சார்ந்த ஏதேனும் ஒரு நிகழ்வுகளை அப்பள்ளி மாணவர்கள் நிகழ்த்தி சாதனை படைத்து வருகின்றனர்.

முன்னதாக ராக்கெட் லாஞ்சிங், பல லட்ச கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ள கோள்களை காணும் வகையில் தொலைநோக்கி உருவாக்கும், சேட்டிலைட் சிக்னலை பள்ளியில் இருந்து ட்ராக்கிங் செய்தனர். தற்போது அதனைத் தொடர்ந்து இந்தியாவில் முதல் முறையாக பள்ளி மாணவர்களே உருவாக்கிய சிறியதாக சேட்டிலைட்டை பள்ளியிலிருந்து விண்ணுக்கு செலுத்தி சாதனை படைத்துள்ளனர்.

சுமார் 1.63 கிலோ கிராம் எடை கொண்ட இந்த சிறிய ரக சேட்டிலைட்டினை பூமியில் இருந்து சுமார் ஒரு லட்சம் அடி உயரத்திற்கு ஹீலியம் பலூன் உதவியுடன் அனுப்பி அங்குள்ள தட்பவெப்ப நிலையை ஆராய்ந்து தகவலை அனுப்பும் வகையில் இதனை சென்னையை சேர்ந்த ஒரு தனியார் பள்ளியும், சீர்காழி சுபம் வித்யா மந்திர் பள்ளி மாணவமாணவிகளும் ஓப்பன் ஸ்பேஸ் பவுண்டேசனுடன் இணைந்து உருவாக்கி அனுப்பியுள்ளனர். இந்த செயற்கைக்கோளானது தொடர்ந்து3முதல்8மணிநேரம் தனது பயணத்தை விண்ணில் செய்து தகவல்களை திட்டும் என கூறிபட்டுள்ளது. இந்தியாவில் முதல் முறையாக பள்ளி மாணவர்களால் உருவாக்கப்பட்டு பள்ளியில் இருந்து செலுத்தப்பட்ட முதல் செயற்கைக்கோள் இது என்பது குறிப்பிடத்தக்கது. பள்ளியில் இருந்து விண்கலம் விண்ணில் ஏவப்பட்டது நிகழ்வை அப்பகுதி மக்கள் மட்டும் இன்றி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

இந்நிகழ்வில், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் பன்னீர்செல்வம், சீர்காழி காவல் ஆய்வாளர் சிவகுமார், பள்ளி மாணவ மாணவிகள், மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு இந்த நிகழ்வை கண்டு மகிழ்ந்தனர்.



பேரறிஞர் அண்ணாவின் 55 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு. திமுகவினர் திருவொற்றியூரில் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர் இதனை அடுத்து. திருவொற்றியூர் தியாகராஜ சுவாமி வடிவுடையம்மனை சாமி தரிசனம் செய்த பின் திருக்கோவிலில் நடைபெற்ற பொது விருந்தில் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் சுதர்சனம், திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே பி சங்கர் மாநகராட்சி மண்டல குழு தலைவர் தி.மு தனியரசு உள்ளிட்டார் கலந்து கொண்டனர். அவர்களுக்கு கோவிலில் நிர்வாகம் சார்பில் சிறப்பு வரவேற்பு அளித்தனர். இதனையடுத்து பொது விருந்தில் பொதுமக்களுடன் அமர்ந்து சட்ட மன்ற உறுப்பினர்கள் உணவை சாப்பிட்டனர். பின்னர் பொதுமக்களுக்கு புடவைகளும் நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் மண்டல குழு தலைவர் தி.மு, வட்ட செயலாளர் சொக்கலிங்கம், கேபிள் டி.வி ராஜா ரஜினி நந்தி உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் ஆரோக்கிய நடைப்பயிற்சியை வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் வே. இரா. சுப்புலெட்சுமி, வேலூர் கோட்டை மைதானம் காந்தி சிலை அருகே தொடங்கி வைத்து, நடைப்பயிற்சியில் கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சியில் வேலூர் மாநகராட்சி திருமதி சுஜாதா ஆனந்தகுமார், மாநகராட்சி ஆணையாளர் ஜானகி ரவீந்திரன், துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு. பானுமதி, வருவாய் கோட்டாட்சியர் கவிதா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# செங்குன்றத்தில் சாலை பாதுகாப்பு மாத விழிப்புணர்வு நிகழ்ச்சி



சென்னை , பிப். 5-

ஆவடி காவல் சரகம், செங்குன்றம் போக்குவரத்து எம்-4 காவல் நிலையம் சார்பில், டிராபிக் விழிப்புணர்வு நிகழ்ச்சி ரெட்டில்ஸ் சுட்ரோடு ஜங்ஷன் அருகில் நடைபெற்றது. ஹெல்மெட் கட்டாயம் அணிய வேண்டும் என்பதன் அவசியம் குறித்துயானைமீது ஹெல்மெட் அணிந்து இருப்பது போல் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

செங்குன்றம் போக்குவரத்து டிராபிக் ஆய்வாளர் (அர்ஜ) சோபிதாஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ட்ராபிக் எஸ்.ஐ. உமாபதி போக்குவரத்து மக்களிடம் இருசக்கர வாகன ஓட்டிகள் கட்டாயம் ஹெல்மெட் அணிய வேண்டும் என்றும், இருசக்கர வாகனத்தில் சாலையில் செல்லும் பொழுது கண்டிப்பாக இடதுபுறமாகதான் செல்ல வேண்டும் என்றும், இரு சக்கர வாகனத்தில் இரண்டு நபர்களுக்கு மேல் பயணிக்க கூடாது என்றும், செல்போன் பேசிக் கொண்டே வாகனம் ஓட்டக்கூடாது என்றும், அதிவேகம் ஆபத்தை தரும். மிதமான வேகத்தில் செல்ல வேண்டும் என்றும், போக்குவரத்து விதிகளை மதிக்க வேண்டும் என்றும், மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டக்கூடாது என்றும், நான்கு சக்கர வாகனத்தில் செல்லும் போது கண்டிப்பாக சீட் பெல்ட் அணிய வேண்டும் என்றும், விபத்தில்லா பகுதியாக மாற்ற வேண்டும் என்று பொதுமக்களிடையே அறிவுறுத்தினார். இந்த நிகழ்வின் போது எஸ்.ஐ. விவேகானந்தன், எஸ்.ஐ. செல்வராஜ், காவலர்கள் ராஜேஷ், சந்துரு உடன் இருந்தனர்.

# காக்கவாக்கம் உதயநிதி ஸ்டாலின் ரசிகர் நற்பணி மன்ற முப்பெரும் விழாவில் உமாமகேஸ்வரன் பங்கேற்பு



ஊத்துக்கோட்டை, பிப் 5-

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், காக்கவாக்கம் கிளை உதயநிதி ஸ்டாலின் ரசிகர் நற்பணி மன்றம் துவக்க விழா மற்றும் பெயர் பலகை திறப்பு விழா மற்றும் தூய்மை பணியாளர்களுக்கும்,பொது மக்களுக்கும் என 200 குடும்பங்களுக்கு நலத்திட்ட உதவி பொருட்கள் வழங்கும் விழா என முப்பெரும் விழா நிகழ்ச்சி காக்கவாக்கம் கிரேசூட் ஓட்டல் எதிரே நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு,ஒன்றிய பொருளாளர் சுந்தர்ஏழுமலை தலைமை தாங்கினார். ஒன்றிய செயலாளர் தினேஷ்குமார், கிளை தலைவர் கோகுல்,செயலாளர் புவனேஷ், பொருளாளர் நரேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில், சிறப்பு அழைப்பாளராக திருவள்ளூர் மாவட்ட உதயநிதி ஸ்டாலின் ரசிகர் நற்பணி மன்ற தலைவர் வி.ஜே.உமாமகேஸ்வரன் கலந்து கொண்டு நற்பணி மன்ற பெயர் பலகையை திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார்.மாவட்ட செயலாளர் கிரண்குமார், மாவட்ட பொருளாளர் விஜயசாரதி ஆகியோர் 200 குடும்பங்களுக்கு நலத்திட்ட உதவி பொருட்களை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியின்போது காக்கவாக்கம் கிராம பொதுமக்கள் தங்களது பகுதிக்கு இயக்கப்பட்டு வந்த பேருந்து தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்றும் மீண்டும் இவ்வழித்தடத்தில் இப்பேருந்தை இயக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை வைத்தனர். அதற்கு பதில் அளித்து பேசிய உமாமகேஸ்வரன் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் பேசி இன்னும் ஒரு மாதத்திற்குள் மீண்டும் இவ்வழித்தடத்தில் பேருந்தை இயக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி கூறினார்.

இந்நிகழ்ச்சியில், திருவள்ளூர்ராஜ்மோகன், பூண்டி ரஞ்சித்குமார், பெரியபாளையம் பாஷா, தண்டலம் விக்கி, சரத்குமார், சுர்ஜித், தொளவேடு கிளை கழக செயலாளர் எம். செல்வம், கே.ஏழுமலை, மன்ற உறுப்பினர்கள் தனுஷ், ஹரிஷ்,நவீன், துளசிராம், ஹேமந்த், திவாகர், குமரேஷ், ஜவகர், லோகேஷ், தனுஷ், திலீப், விக்கி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஒன்றிய பொருளாளர் சுந்தர்ஏழுமலை மற்றும் மன்ற நிர்வாகிகள்,கிராம பொதுமக்கள் உள்ளிட்டோர் சிறப்பாக செய்திருந்தனர்.

# மாணவர்கள் கல்வி கற்பதில் கடலூர் மாவட்டம் ஆட்சியரின் அதிரடி நடவடிக்கையால் முன்னேற்றம்

காட்டுமன்னார்கோவில் பிப் 5

கடலூர் மாவட்டம் கல்வி வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டமாக உள்ள நிலையில் அவற்றை மாற்றுவதற்கு பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளை கல்வி கற்பதற்கு தொடர்ந்து வலியுறுத்த வேண்டுமென மாநில வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம் ஆர் கே பன்னீர்செல்வம் கூறினார்.



கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில் அருகே ராஜேந்திரசோழகன் கிராமத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் அம்ரூத் திட்டத்தின் கீழ் பேரூராட்சி அனைத்து வார்டுகளுக்கும் தடையில்லா குடிநீர் வழங்குவதற்கான பணிகள் தொடக்க விழா நடந்தது.

விழாவிற்கு மாவட்ட ஆட்சியர் அ. அருண்தம்புராஜ் இஆப தலைமை தாங்கினார். காட்டுமன்னார்கோவில் பேரவை தொகுதி உறுப்பினர் எம். சிந்தனை செல்வன் , உதவிஆட்சியர் ராஷ்மி ராணி, பயிற்சி ஆட்சியர் செல்வி அபிநயா , பேரூராட்சி இணை இயக்குனர் வெங்கடேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பேரூராட்சி தலைவர் எஸ் கணேச மூர்த்தி வரவேற்றார்.

விழாவில் அமைச்சர் எம் ஆர் கே பன்னீர்செல்வம் பங்கேற்று குடிநீர் திட்டப் பணிகளைதொடங்கிவைத்தார். பின்னர் அவர் பேசுகையில் காட்டுமன்னார்கோயில் பேரூராட்சியில் இதுவரை 48 கோடிமதிப்பீட்டில்திட்டபணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளது தற்போது 33 கோடி மதிப்பில் குடிநீர் திட்ட பணிகள் தொடங்கப்பட்டுள்ளது இந்த பணிகளால் வரும் 10 மாதங்களில் சாலைகள் பள்ளம் தோண்டப்பட்டு குழாய்கள் பதிக்கப்பட்டு வீடுகள் தோறும் தடையில்லா குடிநீர் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது ஆகவே 10 மாதத்திற்கு சாலைகள் சரியில்லை என பொதுமக்கள் குறை கூறாமல் பொறுத்துக் கொள்ள வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

எதிர்காலத்தை கருத்தில் கொண்டு2052 ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் தற்போது குடிநீர் வழங்குவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. அரசு பள்ளிகளின் மாணவர்கள் அதிகம் சேரும் நிலை தற்போது உள்ளது. கடலூர் மாவட்டம் கல்வியில் பின்தங்கி உள்ள மாவட்டமாக தற்போது அறியப்பட்டது .அதன்படி கடந்த இரண்டு மாதங்களாக மாவட்ட ஆட்சியர் கடுமையான நடவடிக்கை எடுத்ததால் இரண்டு மாதங்களுக்கு முன்னர் பின்தங்கிய 10 மாவட்டங்களில் எட்டாவது இடத்தில் இருந்த கடலூர் மாவட்டம் தற்போது இரண்டாவது இடத்திற்கு முன்னேறி உள்ளது. கட்சி வேறுபாடுஇல்லாமல்,பாகுபாடு இல்லாமல் ,பழகுவதால் காட்டுமன்னார்கோவில் பகுதி அமைதியாக உள்ளது என்றார்.

இக்கூட்டத்தில் கல்வி குழு தலைவர்கள் ராமலிங்கம், முத்துசாமி, துப்புரவு ஆய்வாளர் துரைராஜ் பேரூராட்சி துணைத் தலைவர், மற்றும் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். செயல் அலுவலர் தங்கவேலு நன்றி கூறினார்.

# தென்காசியில் டிட்டோஜாக் கூட்டமைப்பு சார்பில் கருப்பு பட்டை அணிந்து ஆர்ப்பாட்டம்



தென்காசி : பிப். 5,

தென்காசி மாவட்ட டிட்டோஜாக் சார்பில் அரசாணை 243 ஐ ரத்து செய்திடவும், அரசாணை 243க்கு நன்றி தெரிவிக்கும் மாநாடுகளில் தமிழ்நாடு பள்ளிக் கல்வி அமைச்சர், கல்வித்துறை இயக்குனர்கள் கலந்து கொள்வதை தவிர்க்கக்கோரியும் கருப்பு பட்டை மற்றும் சட்டை அணிந்து மாபெரும் ஆர்பாட்டம் புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள முதன்மை கல்வி அலுவலகம் முன் வாயிலில் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு தென்காசி மாவட்ட ஒருங்கிணைப்பாளரும் தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் தென்காசி மாவட்ட செயலாளர் செய்யது இப்ராஹிம் மூசா தலைமை வகித்தார். தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் மாநில செயற்குழு உறுப்பினர் ராஜ்குமார், தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாநில செயற்குழு உறுப்பினர் மருது பாண்டியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட ஒருங்கிணைப்பாளரும் தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்ட தலைவர் ஆரோக்கியராசு வரவேற்று பேசினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் தொடக்கக் கல்வித் துறையில் உள்ள இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர்களை பெரிதும் பாதிக்கும் அவசர கோலத்தில் அறிவிக்கப்பட்ட அரசாணை 243ஐ உடனடியாக ரத்து செய்திட வேண்டும், அரசாணைக்கு நன்றி தெரிவிக்கும் மாநாடுகளில் கல்வி அமைச்சர் மற்றும் கல்வித் துறை இயக்குனர்கள் கலந்து கொள்வதை முற்றிலும் தவிர்க்க கோரியும், டிட்டோஜாக்கின் 12 அம்ச கோரிக்கைகளுக்கு உடனடியாக அரசாணைகள் வெளியிடக் கோரியும் கோரிக்கை முழக்க கோஷம் எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்ட செயலாளர் கனகராஜ், குமரன், தமிழ்நாடு ஆரம்ப பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்டத் தலைவர் ரமேஷ், சுதர்சன், மாடசாமி, தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்ற ராஜசேகரன், அகஸ்டஸ்ஜாண், தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்ட பொருளாளர் ஸ்டீபன் சேவியர் ஞானம், மகளிர் அணி ரேச்சல் மல்லிகா ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினர். முடிவில் தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி கல்வி மாவட்ட செயலாளர் ராஜ் குமார் நன்றி கூறினார். இதில் அரசாணை 243 ரத்து செய்ய கோரியும் 12 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தியும் வருகிற பிப்ரவரி 19 சென்னையில் நடைபெறும் உண்ணாவிரதத்தில் 5000க்கும் மேற்பட்டோர் கலந்துகொள்வது என முடிவெடுக்கப்பட்டது.

## கொருக்குப்பேட்டை பகுதியில் சட்டமன்ற உறுப்பினர்

# தனது சொந்த நிதியில் ரூபாய் 20 லட்சம் செலவில் சாலை அமைக்கும் பணி தொடங்கி வைத்தார்

சென்னை,பிப், 5-

சென்னை ஆர்கே நகர் தொகுதியில் கொருக்குப்பேட்டை மீனாம்பாள் நகர் முத்துமாரியம்மன் கோயில் பகுதியில் 190 குடும்பங்கள் கடந்த 50 ஆண்டுகளாக ரயில்வேக்கு சொந்தமான இடத்தில் குடியிருந்து வருகின்றனர்.



அந்த பகுதியில் மாநகராட்சிசார்பில் அடிப்படை வசதிகள் செய்வதில் சட்ட சிக்கல் உள்ளது எனினும் குடிநீர் மின்விளக்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன ஆனால் சாலை வசதி இல்லாமல் இருந்தது தேர்தல் பிரச்சாரத்தின் போது அந்த பகுதிக்கு சாலை அமைத்து கொடுப்பதாக தற்போதைய சட்டமன்ற உறுப்பினர் ஜேஜே எபினேசர் வாக்குறுதி அளித்திருந்தார்.

தனது சொந்த நிதியில் ரூபாய் 20 லட்சம் செலவில் 400 மீட்டர் நீளத்திற்கு ஹாலோ பிளாக் சாலை அமைக்கும் பணி நேற்று தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் மண்டல குழு தலைவர் நேதாஜி யு கணேசன் பகுதி செயலாளர் ஜெபதாஸ் பாண்டியன் லட்சுமணன் மற்றும் பொன் இளவரசன் மாமன்ற உறுப்பினர் மணிமேகலை ஏ.டி. மணி ஏழுமலை ராஜன் சசிகுமார் தமிழ்ச்செல்வன் உட்பட பலர் கலந்து கொண்டனர்




இலுப்பூர் மதர்தெரசா பாலிடெக்னிக் கல்லூரியில் சென்னை வீல்ஸ் இந்தியா லிமிட்ஸ் நடத்திய வளாக நேர்காணலில் 24 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டனர். பணி நியமன ஆணைகளை தாளாளர் இரா.சி.உதயக்குமார் வழங்கி வாழ்த்தினார். நிகழ்வில் கல்லூரி முதல்வர் மு.தினேஷ்குமார் உடனிருந்தார்.



புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தாலுகா, இருதயபுரம் கிறிஸ்து ராஜா தொடக்க மற்றும் உயர்நிலைப்பள்ளியில் 85ஆம் ஆண்டு முப்பெரும் விழா சிறப்பாக நடைபெற்றது. இவ்விழா புதுக்கோட்டை ரோட்டரி சங்கம் முன்னாள் தலைவர் அந்தோணிசாமி தலைமையில், புதுக்கோட்டை கற்பக விநாயகா அறக்கட்டளை அறங்காவலர் முனைவர் கவிதா சுப்பிரமணியன் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். உடன் பள்ளியின் தாளாளர் அருட்தந்தை ஜி சூசை, கிறிஸ்துராஜா உயர்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் முனைவர் குயின் டன். கிறிஸ்துராஜா, தொடக்கப் பள்ளியின் தலைமை ஆசிரியை அருட்சகோதரி ஜேசு மேரி, மூத்தஆசிரியைகள் ஜாக்லின், அருள்மேரி பங்கேற்றனர். விழாவை அல்போன்சா ஆசிரியர் ஏற்பாடு செய்திருந்தனர்.

# செல்போன் பார்ப்பதை தாய் தட்டிக்கேட்டதால் கல்லூரி மாணவி தூக்கிட்டு தற்கொலை

சென்னை, பிப். 5-

சென்னை புதுவண்ணாரப்பேட்டை பூண்டி தங்கம்மாள் தெருவைச் சேர்ந்த ரமேஷ் இவரது மனைவி ஷிலா இவர்களுக்கு சுனிதா ஸ்ரீ (20) என்ற மகள் உள்ளார்.



சுனிதா ஸ்ரீ பிராட்வேயில் உள்ள கன்னிகா பரமேஸ்வரி கல்லூரியில் மூன்றாம் ஆண்டு கிரிமினாலஜி படித்து வந்தார். எப்போதும் சுனிதா ஸ்ரீ வீட்டில் செல்போனை அதிகமாக பார்த்துக் கொண்டிருந்துள்ளார் .இதை பல முறை தாய் ஷிலா கண்டித்து உள்ளார். தாய் ஷிலா மகள் சுனிதா ஸ்ரீ யை கண்டித்துள்ளார்.

இதனால் சோகத்தில் இருந்த சுனிதா ஸ்ரீயை சமாதானம் படுத்துவதற்காக பிரியாணி வாங்கி வருவதாக சொல்லி தாய் ஷிலா வெளியே சென்றுள்ளார். பின்னர் பிரியாணி வாங்கி விட்டு வீடு திரும்பிய தாய் ஷீலா வீட்டிற்குள் உள்ளே சென்று பார்த்த போது வீட்டின் படுக்கை அறையில் மகள் சுனிதா ஸ்ரீ தூக்கிட்டு தொங்குவதை கண்டு அதிர்ச்சி அடைந்து உடனடியாக அக்கம் பக்கத்தினர் சுனிதா ஸ்ரீயை மீட்டு அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு தூக்கி சென்றனர்.

பின்னர் மருத்துவர்கள் சுனிதா ஸ்ரீ பரிசோதனை செய்து பார்த்த போது இறந்துவிட்டதாக தெரிவித்தனர். இச்சம்பவம் குறித்து புது வண்ணாரப்பேட்டை போலீசார் வழக்கு பதிவு செய்து உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

# பள்ளி கூடத்தில் பெற்றோர்– ஆசிரியர் கலந்தாய்வு கூட்டம்

காரைக்கால், பிப், 5-

காரைக்கால் மாவட்டம் கோட்டுச்சேரி வ. உ சி அரசு மேல்நிலைப் பள்ளியில் பெற்றோர்–ஆசிரியர் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது, முன்னதாக விழாவை பள்ளியின் துணை முதல்வர் கனகராஜ் பெற்றோர் மற்றும் மாணாக்கர்களை வரவேற்று விழாவையும் தலைமை தாங்கி மாணவர்கள் எவ்வாறு படிப்பில் கவனம் செலுத்த வேண்டும்? அவர்களை வீட்டில் பெற்றோர்கள் எவ்வாறு கண்காணிக்க வேண்டும்? மேலும் மாணவர்களின் சீருடை மற்றும் சிகை அலங்காரத்தில் பெற்றோர்கள் எவ்வாறு மாணவர்கள் மீது கவனம் செலுத்த வேண்டும் என்பது குறித்து அறிவுரை கூறினார்கள்.




மேலும்பள்ளியின்தலைமை ஆசிரியை .விஜயலட்சுமி பத்தாம்வகுப்பு பொதுதேர்வுக்கு தயாராகிக் கொண்டிருக்கும் மாணவர்களுக்காக நடைபெற்றுக் கொண்டிருக்கும் சிறப்பு வகுப்புகளையும் அதனை எவ்வாறு மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது குறித்தும் விரிவாக பேசினார். அவரைத் தொடர்ந்து மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு வகுப்பு நடத்தும் விரிவுரையாளர்கள் மாணவர்கள் எவ்வாறு பொதுத்தேர்வை எதிர்கொள்வது மற்றும் அதற்கான முன்னேற்பாடுகளைப் பற்றி விவரமாக எடுத்துக் கூறினர், மேலும் பள்ளியின் உடற்கல்வி ஆசிரியர் மாணவர்களின் ஒழுக்கம் சார்ந்த விஷயங்களையும் பள்ளிக்கு நேரத்தோடு வருவது குறித்தும் விளக்கிக் கூறினார்.

இறுதியாக விழாவிற்கு வந்திருந்த பெற்றோர்கள் பள்ளி ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு உணர்வு மற்றும் கல்வி பயிலும் தங்கள் குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கு எடுத்துள்ள முயற்சிகளுக்கு பாராட்டுகளைத் தெரிவித்தனர். அதோடுமட்டுமல்லாமல் பள்ளி ஆசிரியர்கள் தேர்வு குறித்து அறிவுறுத்துகின்ற செயல்களை முழு ஒத்துழைப்போடு செய்து தருவதாகவும் உறுதியளித்தனர்.

கல்வித்தரத்தை பெற்றோர்கள் அறியும் பொருட்டு மாணவர் தர அட்டையில் பெற்றோர்களிடம் கையெழுத்து பெறப்பட்டது. இந்த கலந்தாய்வுகூட்டத்தில் 200-க்கும் மேற்பட்ட பெற்றோர்கள் மற்றும் 500 மாணாக்கர்கள் கலந்து கொண்டனர். இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை பள்ளியின் அனைத்து நிலை ஆசிரியர்களும், அலுவலக ஊழியர்களும் ஏற்பாடு செய்து இருந்தனர்.

# புதுக்கோட்டை தேசிய நெடுஞ்சாலையில் சரக்கு வாகனம் கார் மோதி விபத்தில் ஒருவர் பலி





புதுக்கோட்டை : பிப். 5-

புதுக்கோட்டையில் தேசிய நெடுஞ்சாலையில் சரக்கு வாகனமும், காரும் மோதி விபத்துக்குள்ளான சம்பவத்தில் 4 பேர் படுகாயமடைந்தனர்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் திருச்சி காரைக்குடி தேசிய நெடுஞ்சாலையில் நேற்று காலை கார் சென்றுகொண்டிருந்தது. அதேசாலையில் டாடா ஏஸ் சரக்குவாகனம்தண்ணீர்எடுத்து சென்றுகொண்டிருந்தது.

அப்போது, சரக்கு வாகனமும் காரும் நேருக்கு நேர் மோதின. இந்த கோர விபத்தில் சம்பவ இடத்திலேயே ஒருவர் உயிரிழந்தார். மேலும், 4 பேர் படுகாயமடைந்தனர். தகவலறிந்து விரைந்து வந்த போலீசார் படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். மேலும், இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி வருகின்றனர்.



புதுக்கோட்டை மாவட்ட கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் சங்க புதிய நிர்வாகிகள் கூட்டம், புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள அரசு ஊழியர் கட்டிடத்தில் நடைபெற்றது. சங்கத்தின் மாநில அமைப்பு செயலாளர் கே.மாடசாமி தலைமையில், மாநில தணிக்கையாளர் ராஜேந்திரன் முன்னிலையில், புதிய நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றது. மாவட்ட செயலாளர் ஆர்.எம்.டி.வடிவேல், மாவட்ட பொருளாளராக ரங்கசாமி, மாவட்ட இணைச்செயலாளராக பன்னீர்செல்வம் மற்றும் மாவட்ட அமைப்புச் செயலாளர் தாமோதரன், புதுக்கோட்டை கோட்ட செயலாளர் கருப்பையா, இலுப்பூர் கோட்ட செயலாளர் ரவி, செயற்குழு உறுப்பினர்கள் புதிதாக தேர்வு செய்யப்பட்டனர். கூட்டத்தில் மாவட்ட கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் கலந்து கொண்டனர்.

# புளியங்குடி நகர கழக சார்பாக பேரறிஞர் அண்ணாவிற்கு நினைவஞ்சலி



தென்காசி : பிப். 5-

தென்காசி மாவட்டம். சிந்தாமணியில் முன்னாள் முதல்வர், காஞ்சித்தலைவன், பேரறிஞர் அண்ணாவின் 55-வது நினைவு நாளையொட்டி புளியங்குடி நகர கழக சார்பாக நகரக் கழக அலுவலகத்தில் திமுக நகரசெயலாளர் ஆ. அந்தோணிசாமி தலைமையில் பேரறிஞர் அண்ணாவின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி, மரியாதை செலுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் அவைத் தலைவர் வேல்சாமிபாண்டியன், முன்னாள் நகர்மன்ற தலைவர் வெங்கட்ராமய்யர், நகர் மன்ற தலைவி விஜயா, மாவட்ட வலைதள பொறுப்பாளர் கவிதா மாரியப்பன், நகர துணை செயலாளர் காந்திமதி அம்மாள், மாவட்ட பிரதிநிதி சுரேஷ், மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் ராஜராஜன், அருணாச்சலம், மாவட்ட சிறுபான்மை ராணி, அமைப்பாளர் நாகூர் கனி, நகர அமைப்பாளர் சேக் மைதீன், நகர பொருளாளர் காஜா மைதீன், வர்த்தக அணி பிரிவு அமைப்பாளர் மைதீன், மீனவரணி அமைப்பாளர் பீர் ஒலி, மாரிச்செல்வம், விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் சேதுராமன், பேராசிரியர் நீலமேகம், நகர் மன்ற உறுப்பினர் கார்த்திக் மகேஷ், மாவட்ட மகளிர் அணி துணைஅமைப்பாளர் பொன்னுதுரைச்சி, ஞானபண்டிதன், கிளைச் செயலாளர் ராஜ் மீனா, ஜெகநாத பெருமாள் ஆகியோர் கலந்து கொண்டு பேரறிஞர் அண்ணாவின் நினைவுநாளில் மலர்அஞ்சலி செலுத்தினர்.

# நமது புனித தலங்களின் முக்கியத்துவத்தை முந்தைய ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ளத்தவறி விட்டனர் : பிரதமர் மோடி



*கவுகாத்தி : பிப். 5-*

*நமதுபுனிததலங்களின் முக்கியத்துவத்தை முந்தைய ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ளத்தவறி விட்டதாக பிரதமர் மோடி குற்றம்சாட்டி உள்ளார்.*

*அசாம் மாநிலம் கவுகாத்தியில் ரூ.11,600 கோடியிலான வளர்ச்சி திட்டங்களை தொடங்கி வைத்த பின் பிரதமர் மோடி பேசியதாவது, கடந்த 10 ஆண்டுகளாக இந்தியாவின் நிலைமை மாறியிருப்பது எனக்கு திருப்தி அளிக்கிறது.*

*எந்த நாடும் தனது கடந்த காலத்தை அழித்து மறைப்பதன் மூலம் வளர்ச்சி அடைய முடியாது. நமது புனித தலங்களின் முக்கியத்துவத்தை முந்தைய ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ளத்தவறி விட்டனர். கடந்த 10 ஆண்டுகளில் அசாமில் அமைதி திரும்பியுள்ளது. 7,000க்கும் மேற்பட்டோர் ஆயுதங்களை கீழே போட்டு விட்டு இயல்பு வாழ்க்கைக்கு திரும்பி உள்ளனர் என்று மோடி தெரிவித்துள்ளார்.*

# 'புதுமைப்பெண் திட்டத்தால் தன்னம்பிக்கை பிறக்கிறது' – தஞ்சை மாணவி பாராட்டு





சென்னை : பிப். 5-

"புதுமைப் பெண் திட்டத்தின் மூலம் கிடைக்கும் இந்தப் பணம் எனக்குப் பல வழிகளில் பயன்படுகிறது. பேருந்து போக்குவரத்துக்கு, நோட்டுப் புத்தகங்கள் வாங்க பயன்படுகிறது. என் பெற்றோரின் குடும்பச் செலவுக்கும் பயன்படுகிறது. படிக்கும்போதே சம்பாதிப்பது போன்ற உணர்வு எனக்கு வருகிறது. அதைவிட மனதில் ஒரு தன்னம்பிக்கை பிறக்கிறது. இந்தத் திட்டத்தை உருவாக்கிய தமிழக முதல்வர் இருப்பிடம் நோக்கி என் கரங்கள் குவிந்து நன்றியை செலுத்துகின்றன" என்று இத்திட்டத்தின் மூலம் பயனடைந்து வரும் மாணவி பூர்ணா கூறியுள்ளார்.

இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "ஓலைக் குடிசைகளில் உள்ள சிறிய துவாரங்கள் வழியே கதிரவனின் ஒளிக்கதிர்கள் ஒரு குழல்போல் உள்ளே பாய்வதைப் பார்த்திருப்போம். இந்தக் குடிசை இருக்குமிடம் ரெங்கநாதபுரம், நடுப்படுகை. குடிசையின் முன்புறத்தில் 100 மீட்டர் தொலைவில் திருமலை ராஜன் ஆறு. மறுபுறம் 400 மீட்டர் தொலைவில் நடாறு. இரண்டு ஆறுகளுக்கும் இடையில் உள்ள படுகையில்தான் இந்தக் குடிசை உள்ளது. இந்தப் படுகையில் ஏறத்தாழ 35 குடும்பங்கள் உள்ளன. இந்தப் படுகை தஞ்சை மாவட்டம் கும்பகோணத்துக்கு அருகில் உள்ள பட்டீஸ்வரம் பேரூராட்சிக்கு உட்பட்டது. இந்தக் குடிசையில் இருந்து பட்டீஸ்வரம் ஏறத்தாழ நான்கு கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது.

இந்தப் பகுதியில் உள்ள குழந்தைகள் பட்டீஸ்வரம் அரசு மேல்நிலைப்பள்ளிக்கு நடந்து சென்றுதான் படிக்க வேண்டும். அப்படிச் சென்று படித்து பன்னிரண்டாம் வகுப்பில் (பிளஸ் 2) தேர்ச்சி பெற்றவர்தான் பூர்ணா. பூர்ணா, தன் தந்தை பன்னீர்செல்வம், தாய் காமாட்சி, கல்லூரியில் படிக்கும் தம்பி பால சுப்பிரமணியம் ஆகியோருடன் இந்தக் குடிசையில்தான் வாழ்கின்றார். பெற்றோர் இருவரும் விவசாயக் கூலித் தொழிலாளர்கள்.

பள்ளிப்படிப்பை முடித்து ஏறத்தாழ 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கும்பகோணம் அரசு மகளிர் கல்லூரியில் சேர்ந்து பி.எஸ்.சி கணிதப் பாடத்தைத் தேர்வு செய்து படித்து வருகிறார். பட்டீஸ்வரத்திலிருந்து பேருந்தில் கல்லூரிக்குச் செல்கிறார். இந்தப் பூர்ணாவுக்கு மாதம் ரூ.1,000 (ரூபாய் ஆயிரம்) வங்கி வழியாக புதுமைப் பெண் திட்டத்தால் சென்று சேர்கிறது. இந்தப் பணம் கிடைத்துள்ளதை எண்ணி மிகுந்த மகிழ்ச்சி அடையும் பூர்ணா, இந்தப் பணம் எனக்குப் பல வழிகளில் பயன்படுகிறது. பேருந்து போக்குவரத்துக்கு, நோட்டுப் புத்தகங்கள் வாங்க பயன்படுகிறது. என் பெற்றோரின் குடும்பச் செலவுக்கும் பயன்படுகிறது. படிக்கும்போதே சம்பாதிப்பது போன்ற உணர்வு எனக்கு வருகிறது. அதைவிட மனதில் ஒரு தன்னம்பிக்கை பிறக்கிறது. இந்தத் திட்டத்தை உருவாக்கிய தமிழக அரசுக்கு, தமிழக முதல்வருக்கு எனது நன்றிகள்" என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விஜய் தற்போது சோதனை காலகட்டத்தில் உள்ளார் – ஹெச்.ராஜா பரபரப்பு பேட்டி



*திருச்சி : பிப். 5-*

*நடிகர் விஜய் தற்போது சோதனை காலகட்டத்தில் உள்ளார் என பாஜக முன்னாள் தேசிய செயலாளர் ஹெச்.ராஜா கருத்து தெரிவித்துள்ளார்.*

*திருச்சி பாஜக அலுவலகத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த பாஜக முன்னாள் தேசிய தலைவர் ஹெச்.ராஜா, "நாம் தமிழர் கட்சி நிர்வாகிகள் இல்லத்திலிருந்து ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக செய்திகள் வருகிறது. அவை யாருக்கு எதிராக பயன்படுத்த வைக்கப்பட்டிருந்தது என தெரிய வேண்டும்.*

*தமிழக காவல்துறை நாம் தமிழர் கட்சியினர் மீது இதுவரை நடவடிக்கை எடுக்காதது ஏன். தமிழக காவல்துறையின் அத்துமீறல் நடவடிக்கைகள் பாரபட்ச செயல்பாடுகள் அதிகரித்து வருகிறது. தமிழக காவல்துறை பாஜகவினரை குறிவைத்து வழக்கு பதிவு செய்கிறது.*

*சென்னை கிளாம்பாக்கத்தில் பேருந்து நிலையம் அமைப்பதற்கு, 30 ஆண்டு பழமையான கோவிலை இடித்துள்ளார்கள். ஆளும் திமுக அரசு, இந்து மத விரோத அரசாக செயல்படுகிறது. எனவே தமிழக அரசு இந்து விரோத போக்கை இத்துடன் நிறுத்திக் கொள்ள வேண்டும்.*

*துப்பாக்கி, வெடி பொருட்கள் போன்றவற்றை நாம் தமிழர் கட்சி நிர்வாகிகளிடமிருந்து என்ஐஏ கைப்பற்றி அவர்கள் மீது நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. ஆனால் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க தவறிவிட்டது.*

*எதிர்காலத்தில் பாஜக தமிழகத்தின் மிகப்பெரிய கட்சியாக உருவெடுக்கும். ஆளுநர் பதவி தேவையா என கூறும் திமுக மற்றும் கூட்டணி கட்சியினர் எதிர்க்கட்சியாகஇருந்தால் ஆளுநர் வாசலிலேயே இருப்பார்கள். ஆளுங்கட்சியாக இருந்தால் ஆளுநர் பதவி வேண்டாம் என மாற்றிப் பேசுவார்கள்.*

*தமிழகத்தில் போதைப் பொருள்கள் புழக்கம் அதிகரிப்பதற்கு சில சக்திகள் ஆயுத கடத்தலில் ஈடுபடுகின்றனர். இந்தியாவில் பெரிய பயங்கரவாத அமைப்புகளை கட்டமைத்து வருகிறார்கள். தமிழகத்தில் தேசிய நடவடிக்கைகள் கட்டமைக்கப்படுகிறது.*

*தமிழக வெற்றி கழகம் கட்சியை துவக்கியுள்ள விஜய்க்கு வாழ்த்துகள். அவர் தற்போது சோதனை காலகட்டத்தில் உள்ளார். தேர்தல் செயல்பாடுகளுக்குப்பிறகே அவரது நிலை புரியவரும்" என தெரிவித்தார்.*

## செந்துறை பகுதியில் ரூ.3.56 கோடி மதிப்பீட்டில்

# புதிய வளர்ச்சித் திட்டப் பணிகள் போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்



அரியலூர் : பிப். 5-

அரியலூர் மாவட்டம், செந்துறை ஒன்றியத்தில், ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில், ரூ.3.56 கோடி மதிப்பீட்டில் பல்வேறு புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை, போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் தொடங்கி வைத்தார்.

அதன்படி செந்துறை ஊராட்சி ஒன்றியம், செந்துறை பெருமாள் கோவில் அருகில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ், ரூ.13.57 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட அங்கன்வாடி மையத்தினை திறந்து வைத்து, அங்கன்வாடி மையத்திற்கு வருகைபுரிந்த குழந்தைகளுக்கு இனிப்புகளை வழங்கி வரவேற்றார். தொடர்ந்து செந்துறை ஊராட்சியில் ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் ரூ.38.5 இலட்சம் மதிப்பில் 1,00,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த் தேக்க தொட்டி அமைக்கும் பணியினை தொடங்கி வைத்து, பணிகளை விரைவாக முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர அறிவுறுத்தினார்.

செந்துறையில் ஊராட்சி, அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி 103 மாணவர்களுக்கும், அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி 175 மாணவிகளுக்கும் ரூ.13.38 இலட்சம் மதிப்பிலான தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கியதுடன், 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவிகள் பொதுத் தேர்வினை எளிதில் எதிர்கொள்ளும் வகையில், கல்வித்துறையில் அனுபவம் வாய்ந்த அரசுப்பள்ளி ஆசிரியர்களால் உருவாக்கப்பட்ட, அனைத்து பாடப்பிரிவுகளிலும் மிக முக்கியமான வினா -விடைகள் அடங்கிய, "தேர்வை வெல்வோம்" புத்தகங்களை தனது சொந்த செலவில் தயாரித்து, மாணவ, மாணவிகளுக்கு அமைச்சர் சிவசங்கர் வழங்கினார்.

அதனை தொடர்ந்து செந்துறை ஊராட்சியில் 15வது நிதிக்குழு மானியம் திட்டத்தின் கீழ், ரூ.38.5 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய புதிய கட்டடம் கட்டும் பணியினையும், பின்னர் இலங்கைச்சேரி கிராமத்தில் ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் ரூ.16.75 இலட்சம் மதிப்பில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த் தேக்க தொட்டி அமைக்கும் பணியினையும் தொடங்கி வைத்து, பணியினை தரமான கட்டுமான பொருட்களை கொண்டு விரைவில் முடித்திட சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

நல்லாம்பாளையம் கிராமத்தில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.12.6 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட நியாயவிலைக் கடை கட்டிடத்தினை திறந்து வைத்து, பொதுமக்களுக்கு பொருள்களை வழங்கி விற்பனையை தொடங்கி வைத்தார். மேலும், நல்லாம்பாளையம் அரசு உயர்நிலைப்பள்ளி மற்றும் சிறுகடம்பூர் அரசு உயர்நிலைப்பள்ளிகளில் பொதுத்தேர்வை எழுதவுள்ள மாணவ, மாணவிகளுக்கு "தேர்வை வெல்வோம்" 10-ஆம் வகுப்பு மாணவர்களுக்கான வினா - விடை புத்தகத்தினை வழங்கினார். பின்னர், உஞ்சினி ஊராட்சியில், குழந்தைகள் நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.28 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இரண்டு வகுப்பறை கட்டிடத்தினை திறந்து வைத்தார்.

ஆனந்தவாடி அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 41 மாணவ, மாணவிகளுக்கு ரூ.1.98 இலட்சம் மதிப்பிலும், இரும்புலிக்குறிச்சி அரசு மேல்நிலைப்பள்ளியை பயிலும் 48 மாணவ, மாணவிகளுக்கு ரூ.2.33 இலட்சம் மதிப்பிலும் பரணம் அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 100 மாணவ, மாணவிகளுக்கு ரூ.4.85 இலட்சம் மதிப்பிலும், தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கியதுடன், 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு "தேர்வை வெல்வோம்" வினா - விடை புத்தகத்தினையும் வழங்கினார். தொடர்ந்து, குமிழியம் கிராமத்தில் ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் ரூ.27.25 இலட்சம் மதிப்பில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த் தேக்க தொட்டி அமைக்கும் பணியினையும், குமிழியம் அல்லூர்பட்டி தெருவில் மகாத்மா காந்தி மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.7.35 இலட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணியினையும் தொடங்கி வைத்து பணிகளை விரைவாக முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

அதனைத்தொடர்ந்து பிலாக்குறிச்சி கிராமத்தில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.13.57 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட அங்கன்வாடி மையக் கட்டிடத்தினை திறந்து வைத்தார். தொடர்ந்து வீராக்கன் கிராமத்தில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் தி;ட்டத்தின் கீழ் ரூ.12.3 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட நியாய விலைக்கடையினை திறந்து வைத்து, பொதுமக்களுக்கு பொருள்களை வழங்கி விற்பனையை தொடங்கி வைத்தார். பின்னர், மருவத்தூர் கிராமத்தில் ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் ரூ.27.25 இலட்சம் மதிப்பில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த் தேக்க தொட்டி அமைக்கும் பணியினையும், தொடர்ந்து சேடக்குடிக்காடு கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலைக்கடை கட்டிடம் அமைக்கும் பணியினையும் தொடங்கி வைத்ததுடன், நியாய விலைக்கடை அமைப்பதற்கு நிலம் வழங்கிய சேடக்குடிகாடு, தெற்குத்தெருவைச் சேர்ந்த செந்தில் என்பவருக்கு, போக்குவரத்துத்துறை அமைச்சர் சிவசங்கர் பொன்னாடைப் போற்றி வாழ்த்துத் தெரிவித்தார்.

பின்னர், நக்கம்பாடி ஆதிதிராவிடர் காலனியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் சிறுபாலம் அமைத்தல் பணியினையும், நின்னியூர் கிராமத்தில் குழந்தைகள் நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.37.5 இலட்சம் மதிப்பீட்டில் புதிய இரண்டு வகுப்பறை கட்டடம் அமைக்கும் பணியினையும் துவக்கி வைத்து, பணிகளை தரமான கட்டுமான பொருட்களை கொண்டு, விரைவாக முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டுமென சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் .சா.சி.சிவசங்கர் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் கங்காதாரணி, துணை இயக்குநர் சுகாதார பணிகள் அஜித்தா, உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் பரிமளம், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் விஜயலட்சுமி, மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை) ஜெயா, வட்டார வளர்ச்சி அலுவலர் பிரபாகரன், ஊராட்சிமன்றத் தலைவர்கள், அரசுப்பள்ளி தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாணவ, மாணவிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# "தேர்தல் நேரத்தில் தவறு செய்தால் கட்சியில் இருந்து நீக்கம்" அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் எச்சரிக்கை



தூத்துக்குடி : பிப். 5-

தேர்தல் நேரத்தில் தவறு செய்யும் நிர்வாகிகள் கட்சியில் இருந்து நீக்கப்படுவார்கள் என, தூத்துக்குடி தெற்கு மாவட்ட திமுக செயலாளரான அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தூத்துக்குடி தெற்கு மாவட்ட திமுக சார்பில் மக்களவை தேர்தல் குறித்த ஆலோசனை கூட்டம் கட்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. கூட்டத்துக்கு மாவட்ட செயலாளரும், தமிழக மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சருமான அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் தலைமை வகித்தார். சட்டப்பேரவை தொகுதி பொறுப்பாளர்களான அனிதா ஆர்.ஆனந்த மகேஸ்வரன், எம்.சி.சண்முகையா எம்எல்ஏ, மாவட்ட ஊராட்சி தலைவர் பிரம்மசக்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் மக்களவை தேர்தல் பணிகள் தொடர்பாக கட்சி நிர்வாகிகளுக்கு ஆலோசனை வழங்கி அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் பேசியதாவது: "மக்களவை தேர்தலுக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வழிகாட்டுதலில் இந்தியா கூட்டணி என்ற வலுவான கூட்டணி உருவாகியுள்ளது. அடுத்த ஆட்சி இந்தியா கூட்டணியின் கூட்டாட்சி தான் அமையும். தூத்துக்குடி மக்களவை தொகுதியில், ஏழை, எளிய மக்களை நேசிக்க கூடிய, மழை, வெயில் எந்நேரமும் மக்களை பற்றி சிந்திக்க கூடிய கனிமொழி எம்பி தான் மீண்டும் வேட்பாளராக நிற்பார். அவரை 6 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

இதற்காக சட்டப்பேரவை தொகுதி வாரியாக குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த குழுவினர் ஒன்றிய அளவிலான குழுவை தேர்வு செய்ய வேண்டும். இந்த குழுவில் அனைவரையும் ஒருங்கிணைத்து பொருத்தமானவர்களை தேர்வு செய்து ஒன்றியக்குழுவை அமைக்க வேண்டும். தேர்வு செய்யப்பட்டவர்கள் விவரங்களை மாவட்ட கழகத்தில் அளிக்க வேண்டும். ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் 80 வயதுக்கு மேல் உள்ளவர்கள், மாற்றுத்திறனாளிகள், வெளியூரில் வசிப்பவர்கள், இறந்தவர்கள் விவரங்களை 10 நாட்களுக்குள் சேகரிக்க வேண்டும். தேர்தல் நேரத்தில் தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும், கட்சி தலைவரின் கவனத்துக்கு கொண்டு சென்று, அவர்களை கட்சியில் இருந்து நீக்க மாவட்ட செயலாளர் என்ற முறையில் நடவடிக்கை எடுப்பேன்.

தேர்தல் பணியாற்றுபவர்களுக்கு அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும். கட்சி தலைமைக்கு பெருமை சேர்க்கும் வகையில் பணியாற்ற வேண்டும். எந்தவித கருத்துவேறுபாடுகள் இருந்தாலும், ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து பணியாற்ற வேண்டும். வெற்றி ஒன்றே நமது குறிக்கோள். அது சாதாரண வெற்றியாக இருக்க கூடாது. எதிர்த்து நிற்பவர்கள் அனைவரையும் டெபாசிட் இழக்க செய்ய வேண்டும்" என்றார் அமைச்சர்.

கூட்டத்தில் ஓட்டப்பிடாரம் சட்டப்பேரவை தொகுதி பொறுப்பாளர் டாக்டர் ஆர். சுதானந்தம், மாநில திமுக வர்த்தகரணிஇணைசெயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரிசங்கர், தலைமை செயற்குழு உறுப்பினர்களான முன்னாள் எம்எல்ஏ டேவிட் செல்வின், மாடசாமி, செந்தூர்மணி, மாவட்ட அவைத்தலைவர் அருணாசலம், மாவட்ட துணை செயலாளர்கள் ஜெயக்குமார் ரூபன், ஆறுமுகபெருமாள், பொதுக்குழு உறுப்பினர் காவல்காடு சொர்ணகுமார் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

ஓட்டப்பிடாரம்: தொடர்ந்து ஓட்டப்பிடாரம் சட்டப்பேரவை தொகுதி தேர்தல் பொறுப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் எம்.சி.சண்முகையா எம்எல்ஏ தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் எம்எல்ஏ பேசுகையில், "நடைபெறவுள்ள மக்களவை தேர்தலில் தூத்துக்குடி மக்களவை தொகுதியில் நமது வேட்பாளர் அதிக வாக்குகள் பெற்ற சட்டப்பேரவை தொகுதியாக ஓட்டப்பிடாரம் தொகுதி விளங்க வேண்டும். அந்த வகையில் அனைவரையும் ஒருங்கிணைத்து ஒன்றியக்குழு அமைத்து பணியாற்ற வேண்டும்.

ஒன்றிய செயலாளர்கள் வாட்ஸ்அப் குழு அமைத்து தகவல்களை தெரிவித்து ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும். திமுக தேர்தல் அறிக்கை குழு வருகிறது. அந்த குழுவிடம் நம் பகுதிக்கு தேவையானவற்றை மனுக்களாக கொடுக்கலாம்" என்றார். கூட்டத்தில் பொறுப்பாளர்கள் ஆர். சுதானந்தம், தலைமை செயற்குழு உறுப்பினர் செந்தூர்மணி, ஒன்றிய செயலாளர்கள் சரவணக்குமார், ஜெயக்கொடி, சுப்பிரமணியன், இளையராஜா, ராமசாமி, சுரேஷ்காந்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# டேவிஸ் கோப்பை டென்னிஸ்

## பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா முன்னிலை




**இஸ்லாமாபாத் : பிப். 5,**
**டேவிஸ் கோப்பை டென்னிஸ் உலக குரூப் 1 பிளே-ஆப் சுற்றில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதும் ஆட்டம் இஸ்லாமாபாத்தில் நடைபெற்று வருகிறது.**

டேவிஸ் கோப்பை டென்னிஸ் உலக குரூப் 1 பிளே-ஆப் சுற்றில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதும் ஆட்டம் பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் நடைபெற்று வருகிறது.

60 ஆண்டுகளுக்கு பிறகு முதல்முறையாக பாகிஸ்தான் சென்றுள்ள இந்திய டென்னிஸ் அணிக்கு மிகமுக்கிய பிரமுகர்கள் போல் பலத்த போலீஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. இந்த போட்டியை நேரில் காண மொத்தம் 500 பேருக்குதான் சர்வதேச டென்னிஸ் சம்மேளனம் அனுமதி அளித்துள்ளது.

தொடக்க நாளான நேற்று முன்தினம் சனிக்கிழமை 2 ஒற்றையர் ஆட்டங்கள் நடைபெற்றன. முதல் ஆட்டத்தில் இந்திய வீரர் ராம்குமார் ராமநாதன், பாகிஸ்தான் வீரர் ஐசம் அல் ஹக் குரேஷியுடன் மோதினார். இதில் ராம்குமார் ராமநாதன் 6-7, 7-6, 6-0 என்ற செட் கணக்கில் ஐசம் அல் ஹக் குரேஷியை வீழ்த்தினார்.

மற்றொரு ஒற்றையர் ஆட்டத்தில் என்.ஸ்ரீராம் பாலாஜி 7-5, 6-3 என்ற செட் கணக்கில் பாகிஸ்தானின் அகீல் கானைத் தோற்கடித்தார். இதனால் குரூப் சுற்றில் இந்தியா 2-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

# சச்சின் 10 வருடங்களில் செய்ததை ஜெய்ஸ்வால் 1 வருடத்திலேயே செய்துவிட்டார் – பார்த்திவ் படேல் பாராட்டு



**விசாகப்பட்டினம் : பிப். 5,**
**சச்சின் டெஸ்ட் கிரிக்கெட்டில் முதல் இரட்டை சதமடிக்க 10 வருடங்கள் எடுத்துக்கொண்டதாக முன்னாள் இந்திய வீரர் பார்த்தீவ் படேல் தெரிவித்துள்ளார்.**

இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் இரு அணிகளுக்கும் இடையே நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கு இடையேயான 2-வது போட்டி விசாகப்பட்டினத்தில் நடைபெற்று வருகிறது. இதில் டாஸ் வென்ற இந்திய அணி முதலில் பேட்டிங் செய்வதாக அறிவித்தது. இதனையடுத்து பேட்டிங் செய்த இந்தியா தனது முதல் இன்னிங்சில் 112 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 396 ரன்களில் ஆல் அவுட் ஆனது. இந்தியா தரப்பில் அதிகபட்சமாக ஜெய்ஸ்வால் 209 ரன்கள் அடித்தார். இங்கிலாந்து தரப்பில் அதிகபட்சமாக ஜேம்ஸ் ஆண்டர்சன், சோயப்பஷிர் மற்றும் ரெஹன் அகமது ஆகியோர் தலா 3 விக்கெட்டுகள் வீழ்த்தினர்.

இதனையடுத்து தனது முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து 55.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 253 ரன்கள் மட்டுமே அடித்தது. இதன் மூலம் இந்திய அணி 143 ரன்கள் முன்னிலை பெற்றது. இந்திய அணி தரப்பில் அபாரமாக பந்துவீசிய பும்ரா 6 விக்கெட்டுகள் வீழ்த்தி அசத்தினார். இங்கிலாந்து தரப்பில் அதிகபட்சமாக ஜாக் கிராலி 76 ரன்கள் அடித்தார்.

இதனையடுத்து தனது 2-வது இன்னிங்சை தொடங்கிய இந்திய அணி 2-வது நாள் ஆட்டம் முடிவில் 5 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 28 ரன்கள் எடுத்திருந்தது. இதையடுத்து 3வது நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது.

இந்நிலையில் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் கூட டெஸ்ட் கிரிக்கெட்டில் முதல் இரட்டை சதமடிக்க 10 வருடங்கள் எடுத்துக்கொண்டதாக முன்னாள் இந்திய வீரர் பார்த்தீவ் படேல் தெரிவித்துள்ளார். ஆனால் கடந்த வருடம் அறிமுகமான ஜெய்ஸ்வால் இந்த வருடம் இரட்டை சதமடித்துள்ளதாக பாராட்டும் அவர் இது குறித்து பேசியது பின்வருமாறு;- "ஜெய்ஸ்வால் வான்கடே மைதானத்தில் ஜாம்பவான் வீரர்களுக்கு ரசிகர்கள் கொடுத்த கைதட்டல்களை பார்த்தவர். அதை அவரும் கேட்க விரும்பினார். நாளடைவில் அதே மைதானத்தில் ஐ.பி.எல். தொடரில் சதமடித்த அவர் அந்த கைதட்டல்களை பெற்றதை நாம் பார்த்தோம்.

ஆனால் டெஸ்ட் கிரிக்கெட் என்பது வித்தியாசமான விளையாட்டு. ஏற்கனவே டெஸ்ட் கிரிக்கெட்டில் சதமடித்துள்ள அவர் தற்போது இரட்டை சதமும் அடித்துள்ளார். பொதுவாக அனைவராலும் இரட்டை சதத்தை அடிக்கடி அடிக்க முடியாது. சச்சின் பாஜி கூட டெஸ்ட் கிரிக்கெட்டில் சதமடிக்க 10 வருட காலம் எடுத்துக்கொண்டார். ஆனால் ஜெய்ஸ்வால் டெஸ்ட் கிரிக்கெட்டில் அறிமுகம் ஆன 1 வருடத்திலேயே இரட்டை சதம் அடித்துள்ளார்" என்று கூறினார்.

# தல தோனியின் வீட்டுக்குப் புது உறுப்பினர் மகள் ஜிவாவுக்கு சர்ப்ரைஸ்



**மும்பை : பிப். 5,**
**தனது செல்ல மகள் ஜிவாவுக்காக பெல்ஜியன் ஷெப்பர்ட் நாய் குட்டி வாங்கிய தல தோனி.**

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டனும், இந்நாள் சிஎஸ்கே அணியின் கேப்டனுமாக உள்ளவர் தல தோனி. இவரது தலைமையின் கீழ் இந்திய அணி அனைத்து விதமான உலகக் கோப்பை தொடர்களையும் கைப்பற்றி சாதனை படைத்தது. அதேபோல், சென்னை அணியும் 5 முறை சாம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்துள்ளது.

தோனிக்கு கிரிக்கெட்டை கடந்து விவசாயம், பைக் ஓட்டுதல் என பலவற்றில் ஆர்வம் உண்டு. தன் விவசாய பண்ணையில் தோனி ஸ்ட்ராபெரி விளைவித்து வருகிறார். அதேபோல், 70க்கும் மேற்பட்ட பைக்குகளை வைத்துள்ள அவர், அவற்றின், சர்வீஸையும் அவரே பார்த்துவிடுகிறார்.

இப்படி பலதரப்பட்ட விஷயங்களில் ஆர்வம் கொண்ட தோனி, செல்லபிராணிகள் வளர்ப்பதிலும் கூட ஸ்பெஷல் தான். தோனிக்கு செல்லப்பிராணிகளில் நாய் என்றால் அவ்வளவு பிரியம் என்பது பலருக்கும் தெரியும். தனது வீட்டில் ஜெர்மன் ஷெப்பர்ட் உட்பட 5 செல்லப்பிராணிகளை அவர் வளர்த்து வருகிறார். இவற்றை தன் குடும்ப உறுப்பினர்கள் என்றே அவர் கூறுகிறார்.

இந்நிலையில், திருப்பூரில் உள்ள நாய்கொட்டில் என்ற வளர்ப்பு பிராணிகள் விற்பனை செய்யும் நிறுவனத்திடம் இருந்து, தோனி பிறந்து 100 நாட்களே ஆன, பெல்ஜியம் ஷெப்பர்ட் நாய் குட்டியைப் புதிதாக வாங்கியுள்ளார். இதன் மூலம் அவர் தனது வீட்டில் புதிய உறுப்பினரை இணைத்துள்ளார். மேலும், அவர் மகள் ஜிவாவுக்காக அந்த நாய்க் குட்டியை அவர் வாங்கியிருக்கலாம் என விற்பனை நிறுவனத்தின் உரிமையாளர் சதீஷ் கூறியுள்ளார். இந்த வகை நாய்களை பெரும்பாலானவர்கள் தங்கள் பாதுகாப்பிற்காக வாங்குவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இரட்டை சதம் அடித்த ஜெய்ஸ்வால் நட்சத்திர வீரராக திகழ்வார்– கிராலி பாராட்டு



**விசாகப்பட்டினம் : பிப். 5,**
**இங்கிலாந்துக்கு எதிராக விசாகப்பட்டினத்தில் நடைபெற்று வரும் 2-வது டெஸ்டில் ஜெய்ஸ்வால் 209 ரன் குவித்து முத்திரை பதித்தார். தனது 6-வது டெஸ்டில் முதல் முறையாக இரட்டை சதத்தை பதிவு செய்தார். இதேபோல பும்ரா 45 ரன் கொடுத்து 6 விக்கெட் வீழ்த்தினார்.**

இந்த இருவரது பங்களிப்பையும் இங்கிலாந்து தொடக்க ஆட்டக்காரர் கிராலி பாராட்டியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது:- ஜெய்ஸ்வாலின் ஆட்டம் அபாரமாக இருந்தது. நம்ப முடியாத இன்னிங்ஸ் அவர் ஒரு அற்புதமான வீரராக திகழ்கிறார். அவர் நட்சத்திர வீரராக உருவெடுப்பார்.

பும்ராவின் பந்து வீச்சு நம்ப முடியாத வகையில் அபாரமாக இருந்தது. இது மாதிரியான ஆடுகளத்தில் சிறப்பாக வீசியது பாராட்டத்தக்கது என்று அவர் கூறினார். இங்கிலாந்து அணியில் அதிக ரன் எடுத்தவர் கிராலி ஆவார். தனது 26-வது பிறந்தநாளில் அவர் 76 ரன்கள் எடுத்தார்.

வரலாறு சினிமா

# "என் நெஞ்சில் குடியிருக்கும் தோழர்கள்"

## அரசியல் வருகையை வாழ்த்தியவர்களுக்கு நடிகர் விஜய் நன்றி



**சென்னை : பிப். 5,**
**தனது அரசியல் வருகைக்கு வாழ்த்து தெரிவித்தவர்களுக்கு நடிகர் விஜய் நன்றி தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.**

'தமிழக வெற்றி கழகம்' என்ற பெயரில் நடிகர் விஜய் வெள்ளிக்கிழமை புதிய கட்சி தொடங்கியுள்ளார். நெருங்கி வரும் 2024 மக்களவைத் தேர்தலில் போட்டியிடவில்லை. இத்தேர்தலில் எந்த கட்சிக்கும் ஆதரவு இல்லை என்று தெரிவித்துள்ள விஜய், 2026 சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுவதுதான் இலக்கு என்று அறிவித்துள்ளார். பல அரசியல்கட்சிதலைவர்களும், பிரபலங்களும் இது குறித்து கருத்து தெரிவித்து வருகின்றனர்.

இதனிடையே, "தமிழ்நாட்டு மக்களின் பேரன்போடு நான் முன்னெடுத்துள்ள அரசியல் பயணத்திற்கு தங்களது வாழ்த்துகளை தெரிவித்த பெருமதிப்புக்குரிய பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள், அன்புக்குரிய திரைத்துறை நண்பர்கள், பாசத்துக்குரிய தமிழக தாய்மார்கள், சகோதர, சகோதரிகள், ஊக்கமளிக்கும் ஊடகவியலாளர்கள், "என் நெஞ்சில் குடியிருக்கும் தோழர்கள்" அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றிகளுடன் பணிவான வணக்கங்கள். அன்புடன், விஜய்" என்று தனது அரசியல் வருகைக்கு வாழ்த்து தெரிவித்தவர்களுக்கு நடிகர் விஜய் நன்றி தெரிவித்துள்ளார்.

# மறக்குமா நெஞ்சம் : திரை விமர்சனம்



சென்னை : பிப். 5, பிளஸ் டு படிக்கும்போது சக மாணவி பிரியதர்ஷினியை (மெலினா) காதலித்த கார்த்திக் (ரக்ஷன்), தனது காதலைச் சொல்லாமலேயே 'இதயம்' முரளியைப் போல இருந்துவிடுகிறார். 10 ஆண்டுகளுக்குப் பிறகு இருவரும் மீண்டும் சந்திக்கும் வாய்ப்பு அமைகிறது. இம்முறையாவது கார்த்திக் தனது காதலைச் சொன்னாரா, இல்லையா என்பது கதை.

பள்ளி, கல்லூரி மாணவர்கள் சில காலத்துக்குப் பிறகு மீண்டும் சந்தித்துக்கொள்ளும் 'ரீயூனியன்' கதைகள் பெரும்பாலும் ஒரே மாதிரியான சட்டகத்தைக் கொண்டிருக்கும். இந்தப் படத்தில், 10 ஆண்டுகளுக்கு முன், ஒரு பள்ளியில், ஒரே வகுப்பில் படித்த மாணவ, மாணவியர், பள்ளிக்கு 3 மாதம் வந்து, பிளஸ் டு பாடங்களைப் படித்து மீண்டும் தேர்வு எழுத வேண்டும் என்கிற கட்டாயம் ஏற்படுவதாக அமைக்கப்பட்டிருப்பது திரைக்கதைக்கு ஊக்கம் அளித்திருக்கிறது.

ஆனால், முதல் பாதியில், நடக்கும் பெரும்பாலான பள்ளிப்பருவச் சம்பவங்களில் அழுத்தம் இல்லை. பார்வையாளர்கள் பார்த்துப் பழகியவை வரிசையாக வந்து படுத்துகின்றன. உடற்கல்வி ஆசிரியருக்கும் கணித ஆசிரியைக்குமான காதல் விதிவிலக்காகக் கவர்கிறது. அதை இன்னும் தரமுயர்த்தி ரொமாண்டிசைஸ் செய்திருக்கலாம்.

முதல் பாதியின் சோதனைகளைப் பொறுத்துக்கொண்டால், இரண்டாம் பாதியின் எதிர்பாராத உணர்வுத் தோரணங்களை ரசிக்க முடியும். கார்த்தி - பிரியதர்ஷினியின் மீள் சந்திப்பு, 10 ஆண்டு பணி வாழ்க்கையும், குடும்ப வாழ்க்கையும் முன்னாள் மாணவர்களுக்குக் கற்றுக்கொடுத்திருக்கும் பக்குவம், பள்ளி ஆண்டுவிழா நிகழ்ச்சியில் பங்கேற்கக் கிடைத்த வாய்ப்பை முன்னாள் மாணவர்கள் பயன்படுத்திக்கொள்ளும் விதம், பேனா பிடித்து எழுத மறந்துபோனவர்கள் மீண்டும் தேர்வுஎழுத உட்காரும்போது படும் அவஸ்தை என 2கே கிட்ஸின் எண்ண ஓட்டங்களை, உணர்வுகளை அழகாகப் படியெடுத்துக் காட்டி கவர்கிறார் அறிமுக இயக்குநர் இரா. கோ.யோகேந்திரன்.

பள்ளி மாணவர் கதாபாத்திரம் ரக்ஷனுக்கு கச்சிதமாகப் பொருந்தியிருக்கிறது. ஆனால், நடிப்பில் அவர் இன்னும் செல்ல வேண்டிய தூரம் அதிகம். பிரியதர்ஷினியாக நடித்திருக்கும் மெலினா அழகாகவும் ஈர்க்கும் விதமாகவும் இருக்கிறார். அவருமே கூட காதலுக்கான நடிப்பில் மினிமம் பாஸ் தான். அவருடைய தோழிகளாக நடித்திருப்பவர்கள் இயல்பான நடிப்பைத் தந்திருக்கிறார்கள். தீனாவின் பங்களிப்பையும் 'ப்ராங்ஸ்டர்' ராகுலின் நடனத்துடன் கூடிய நடிப்பையும் குறை சொல்ல முடியாது. உடற்கல்வி ஆசிரியராக வரும் முனீஸ்காந்துக்கான குணச்சித்திரப் பங்களிப்பை இன்னும் கூட்டியிருந்தால் படத்துக்கு வலிமை கூடியிருக்கும்.

நாகர்கோவிலின் பசுமை, நீரோட்டம் ஆகியவற்றை உலர்ந்துபோகாத காதலின் அடையாளமாக ஒளிப்பதிவுக்குள் கொண்டுவர முயன்றுள்ளார் கோபி துரைசாமி. சச்சின் வாரியரின் பாடல்கள், பின்னணி இசை ஆகியவற்றில் இளமையின் ஆராதனை வழிந்தோடுகிறது.

இரண்டாம் பாதித் திரைக்கதையில் நினைவுகளையும் உணர்வுகளையும் கிளர்த்தும் காட்சிகளைப் போல, முதல் பாதியிலும் அழுத்தம் கூட்டிருந்தால் இன்னொரு '96' ஆகியிருக்கும்.

# பவதாரிணியின் கடைசி படத்தில் ஜி.வி.பிரகாஷ், கார்த்திக் ராஜா



**சென்னை : பிப். 5,**
**இளையராஜாவின் மகளும் பாடகியுமான பவதாரிணி சமீபத்தில் புற்றுநோயால் உயிரிழந்தார். அவர் மறைவு ரசிகர்கள் மற்றும் திரை பிரபலங்களை அதிர்ச்சியடைய வைத்தது.**

அவர் கடைசியாக இசையமைத்த திரைப்படம் 'புயலில் ஒரு தோணி'. பி.ஜி. பிக்சர்ஸ் சார்பில் ரோமிலா நல்லய்யா தயாரித்துள்ள இதில் புதுமுகங்கள் விஷ்ணு பிரகாஷ், அர்ச்சனா சிங் நடித்துள்ளனர்.

படத்தை இயக்கியுள்ள ஈசன் கூறும்போது, "இது கதாநாயகிக்கு முக்கியத்துவம் கொண்ட கதை. பெண் சுதந்திரம் என்று பேசினாலும் இன்னும் அவர்கள் பல்வேறு விஷயங்களுக்குப் போராடத்தான் வேண்டியிருக்கிறது. அதை இந்தப் படம் சொல்லும். ப.சிங்காரத்தின் 'புயலிலே ஒரு தோணி' நாவல் கதைக்கும் இதுக்கும் தொடர்பில்லை. அந்த தலைப்பை மட்டும் பயன்படுத்தி இருக்கிறேன்.

இந்தப் படத்துக்கு பவதாரிணிதான் இசை அமைக்க வேண்டும் என்று முடிவு செய்தேன். முழு படத்தையும் முடித்துவிட்டு அவருக்குத் திரையிட்டு காண்பித்தேன். படத்தில் 2 பாடல்கள். அதை விரைவாகவே எங்களுக்கு கொடுத்து ஆச்சரியப் படுத்தினார். ஒரு பாடலை ஜி.வி. பிரகாஷ் குமாரும், மானசியும் பாடியுள்ளனர். கார்த்திக்ராஜா இன்னொரு பாடலை பாடியுள்ளார்" என்றார்.

# "சுய விளம்பரத்துக்காக இறப்பு நாடகம் : வழக்கு பதிய வேண்டும்" – பூனம் பாண்டேவுக்கு வலுக்கும் எதிர்ப்பு



**மும்பை : பிப். 5,**
**இறந்ததாக கூறி மீண்டும் உயிருடன் வந்த நடிகை பூனம் பாண்டே மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திரைப்பட தயாரிப்பாளர்களும், அரசியல் கட்சி தலைவர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த விவகாரத்தில் நடிகை பூனம் பாண்டே மீது விமர்சனங்கள் வலுத்ததுள்ளன.**

பிரபல சர்ச்சை நடிகை பூனம் பாண்டே, கர்ப்பப்பை வாய் புற்றுநோய் காரணமாக வியாழக்கிழமை இரவு இறந்துவிட்டதாகச் செய்திகள் வெளியானது. அவருடைய அதிகாரப்பூர்வ இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அவர் டீம் இதை தெரிவித்திருந்தது. அவர் மேலாளரும் உறுதி செய்திருந்தார். இதனால் அனைத்து மீடியாவும் அவர் இறந்துவிட்டதாக செய்தி வெளியிட்டது. கங்கனாரனாவத், அனுபம்கெர் உட்பட பல நடிகர், நடிகைகளும் ரசிகர்களும் அவர் மறைந்துவிட்டதாக இரங்கல் தெரிவித்தனர்.

இந்நிலையில் தான் உயிருடன் இருப்பதாக, அவர் வீடியோ ஒன்றை நேற்று முன்தினம் சனிக்கிழமை வெளியிட்டுள்ளார். கர்ப்பப்பை வாய் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவே, அவ்வாறு செய்ததாகக் கூறியுள்ளார். மற்றொரு வீடியோவில், "எனது இறப்புச் செய்தி அறிந்து கண்ணீர் சிந்தியவர்களுக்காக வருந்துகிறேன். எனது நோக்கம், நாம் அதிகம் பேசப்படாத கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் குறித்து பேச வைப்பதுதான்" என்று குறிப்பிட்டுள்ளார். இதையடுத்து சமூக வலைதளங்களில் அவரை கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.

இது மோசமான 'பப்ளிசிட்டி ஸ்டன்ட்' என்றும் விழிப்புணர்வு ஏற்படுத்த பல நல்ல வழிகள் இருக்கும்போது, இந்த மலிவான விளம்பரம் அருவருப்பானதாகவும் அவமானகரமாக இருப்பதாகவும் பலர் கூறியுள்ளனர். இது மக்களின் நம்பிக்கையை சீர்குலைக்கும் மோசடி. யாராவது புகார் செய்தால் சட்டரீதியான விளைவுகளுக்குவழிவகுக்கும் என்றும் தெரிவித்துள்ளனர். கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் முற்றிலும்தடுக்கக்கூடியதுதான் என்று தெரிவித்துள்ள சிலர், இதனால் இறந்ததாக பப்ளிசிட்டி செய்திருப்பது அந்த நோய் குறித்து தவறான எண்ணத்தையே ஏற்படுத்தும் என்றும் விமர்சித்துள்ளனர்.'

இதனிடையே, நடிகை பூனம் பாண்டே மீது வழக்கு பதிவுசெய்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று, அகில இந்திய திரைப்பட ஊழியர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. அந்த அமைப்பின் எக்ஸ் பக்கத்தில், "பூனம் பாண்டேவின் செயல் முற்றிலும் தவறானது. புற்றுநோயை பயன்படுத்தி அவர் சுயவிளம்பரம் தேடிக்கொள்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. இப்படியான செயல்களுக்கு பிறகு திரைத்துறையில் எதாவது உண்மையான மரணங்கள் நடந்தால்கூட மக்கள் நம்ப மாட்டார்கள். மற்ற நடிகர்கள் யாரும் தங்கள் சுயவிளம்பரத்துக்காக இந்த அளவுக்கு கீழ்த்தரமாக சென்றது கிடையாது. எனவே நடிகை பூனம் பாண்டே மீதும், அவரது மரணத்தை உறுதிசெய்த அவரின் மேலாளர்மீதும் வழக்கு பதிவுசெய்து நடவடிக்கை எடுக்கவேண்டும்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேபோன்று நடிகை பூனம்பாண்டே மீது போலீஸார் நடவடிக்கை மகாராஷ்டிரா சட்டமேலவை உறுப்பினர் சத்யஜித் தாம்பேயு அறிக்கை வெளியிட்டுள்ளார். அதில், "கர்ப்பப்பை புற்றுநோயால் நடிகை இறந்ததாக சொல்லப்பட்ட செய்தி, நோயைப் பற்றிய விழிப்புணர்வைப் பரப்புவதற்கான ஒரு வழியாக இருக்க முடியாது.

இந்தச் சம்பவம் விழிப்புணர்வாக இல்லாமல், கர்ப்பப்பை புற்றுநோயின் தீவிரத் தன்மையை நீக்கி, கவனத்தை முழுவதுமாக நடிகையின் பக்கம் திருப்புவதாக இருக்கிறது. எனவே தவறான தகவலை வெளியிட்ட நடிகை பூனம் பாண்டே மீது போலீஸார் நடவடிக்கை எடுக்கவேண்டும்' என்றுதாம்பே குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு நடிகை பூனம் பாண்டேவுக்கு எதிர்ப்புகள் வலுத்து வருகின்றன.

# நடிகைகளின் வாழ்க்கை வரலாற்று படங்களில் நடிக்க ஆசைப்படும் அனன்யா பாண்டே



**மும்பை : பிப். 5,**
**பாலிவுட் சினிமாவின் இளம் கவர்ச்சி நடிகை அனன்யா பாண்டே. 'ஸ்டூடன்ட் ஆப் தி இயர் 2', 'காலி பீலி', 'கெஹ்ரையான்', 'லைகர்', 'டிரீம் கேர்ள்-2 புல்' உள்பட பல படங்களில் நடித்துள்ளார்.**

தற்போது 'கண்ட்ரோல்' என்ற படத்தில் நடித்துள்ளார். மூத்த அரசியல்வாதியும், வக்கீலுமான சி சங்கரன் நாயர் வாழ்க்கை வரலாற்று படத்திலும் நடித்து வருகிறார்.

சமூக வலைதளங்களில் மிகவும் ஆக்டிவாக இருக்கும் இவருக்கு லட்சக்கணக்கான ரசிகர்கள் இருக்கிறார்கள். பொதுவாகவே சவாலான வேடங்களில் நடித்து கவனம் ஈர்த்து வரும் அனன்யா பாண்டே, தற்போது முன்னாள் நடிகைகள் சிலரின் வாழ்க்கை வரலாற்று படத்தில் நடிக்க ஆசைப்படுவதாக தெரிவித்துள்ளார். அந்த வகையில் பாலிவுட் முன்னாள் நடிகைகள் மதுபாலா மற்றும் ரேகா ஆகியோரின் வாழ்க்கை வரலாற்று படத்தில் நடிக்க விரும்புவதாக அனன்யா பாண்டே தெரிவித்துள்ளார். அவர்களின் வாழ்க்கையில் சொல்லப்படாத பல்வேறு சம்பவங்களை வெளிக்காட்டும் கண்ணாடியாக இருக்க ஆசைப்படுவதாகவும் ஆசைப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

மதுபாலா, ரேகா ஆகியோரின் வாழ்க்கை வரலாற்று படங்களை எடுக்க விரும்புவதாக கூறிய பல இயக்குனர்களின் கவனம் தற்போது அனன்யா பாண்டே மீது திரும்பி இருக்கிறது.

வரலாறு உலகம்

# இயற்கையின் சீற்றத்தால் வீடுகளை விட்டு வெளியேறி மீண்டும் குடிபுக முடியாத நிலையில் மக்கள்



**ஐஸ்லாந்து : பிப். 5,**

**வடஐரோப்பாவில்உள்ள தீவு நாடு, ஐஸ்லாந்து. இதன் தலைநகரம் ரெக்ஜெவிக்.**

பனிப்பாறைகளாலும், எரிமலைகளாலும் சூழப்பட்டுள்ளதால், நெருப்பு மற்றும் பனியால் ஆன நாடு எனவும் ஐஸ்லாந்து அழைக்கப்படுவதுண்டு. ஐஸ்லாந்து நாட்டு மக்களின் வாழ்க்கைமுறையில், எரிமலைகளிலிருந்து "லாவா" எனப்படும் எரிமலை குழம்புகள் வெளிக்கிளம்புவதும், அவற்றின் சீற்றம் குறைந்த பிறகு ஊரை சுத்தப்படுத்தி மீண்டும் குடியேறுவதும் வழக்கமான ஒன்று.

சில தினங்களுக்கு முன், இந்நாட்டின் க்ரிண்டாவிக் பகுதியில் எரிமலைக்குழம்பு பெருக்கெடுத்து ஓடத் தொடங்கியது. இதையடுத்து, அப்பகுதியில் வாழ்ந்த சுமார் 3800 பேர், தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி விட்டனர். இம்முறை க்ரிண்டாவிக் பகுதியில் எரிமலை குழம்பு மொத்த ஊரையும் நாசம் செய்து விட்டதால், மீண்டும் அங்கு குடியேற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

நகரின் பல இடங்களில் நீண்ட தூரத்திற்கு பூமியில் பிளவு ஏற்பட்டு அதிலிருந்தும் லாவா வெளியேறியது. க்ரிண்டாவிக் பகுதிக்கு அருகே உள்ள ஸ்வார்ட்ஸெங்கி புவிவெப்ப மின் நிலையத்திற்கு உள்ளே லாவா செல்வதை தடுக்கும் வகையில், அதற்கு வெளியே அரசு, தடுப்புகள் அமைத்துள்ளது.

இந்நகரின் 3 வீடுகளை லாவா மூழ்கடித்த காட்சிகளை தொலைக்காட்சியில் கண்ட மக்கள் அதிர்ச்சியடைந்தனர். இயற்கையின் சீற்றத்தால் வீடுகளை விட்டு வெளியேறி மீண்டும் குடிபுக முடியாத நிலையில் உள்ள மக்களில் பலருக்கு வீடுகளின் பேரில் வங்கி கடன் உள்ளதால், தங்கள் வாழ்வாதாரம் என்ன ஆகுமோ எனும் கவலையில் ஆழ்ந்துள்ளனர்.

# இத்தாலி சிறையில் இருந்து தப்பிய மாபியா தலைவன் பிரான்சில் கைது



**பிரான்ஸ் : பிப். 5,**

**இத்தாலியில் கொலை, கொள்ளை, ஆள் கடத்தல், போதை மருந்து வியாபாரம் உள்ளிட்ட சட்டவிரோத செயல்களில் பல "மாபியா" கும்பல்கள் ஈடுபட்டு வருகின்றன.**

இத்தாலியின் போகியா எனும் நகரில் செயல்பட்டு வந்த "கார்கனோ குழு" எனப்படும் இத்தகைய ஒரு கும்பலின் தலைவன், மார்கோ ராடுவோனோ (40). 30 வருட நீண்டகால தேடலுக்கு பிறகு காவல்துறையால் கைது செய்யப்பட்ட மார்கோவிற்கு, நீதிமன்றத்தால் 24-வருட சிறை தண்டனை வழங்கப்பட்டது. மார்கோ மீது போதை மருந்து கடத்தல் உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகள் பதிவாகி இருந்தன.

இதையடுத்து இத்தாலியின் தீவு பிரதேசமான சார்டினியாவின் நுவோரோ பகுதியில் உள்ள கடுமையான காவல் கட்டுப்பாடுகள் நிறைந்த சிறையில் மார்கோ அடைக்கப்பட்டான். கடந்த 2023 பிப்ரவரி மாதம், மார்கோ, சார்டினியாவின் சிறை அறையில் இருந்து வெளியே வந்து, பல போர்வைகளை ஒன்றுடன் ஒன்று இணைத்து, சிறைச்சாலையின் மதில் சுவரையும் தாண்டி, கீழே குதித்து தப்பிச் சென்றான்.

ஐரோப்பிய நாடுகளின் குற்றவாளிகளின் தேடல் பட்டியலில் உள்ள முக்கிய குற்றவாளியான மார்கோ தப்பியது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதையடுத்து ஐரோப்பிய ஒன்றிய காவல்துறை மார்கோவை தேடி வந்தது. ஐரோப்பிய நாடுகளில் தேடுதல் வேட்டை முடுக்கி விடப்பட்டிருந்த நிலையில், மார்கோ, பிரான்ஸ் நாட்டின் அலெரியா பகுதியில் உள்ள ஒரு உணவகத்தில் ஒரு பெண்ணுடன் உணவருந்தி கொண்டிருந்த போது பிரான்ஸ் காவல்துறையினர் அவனை கைது செய்தனர்.

போலியான பெயர் மற்றும் போலி பதிவு எண் கொண்ட வாகனத்துடன் அப்பகுதியிலேயே அவன் வசித்து வந்ததும் தற்போது தெரிய வந்துள்ளது. மார்கோ சிறையிலிருந்து தப்பி சென்றது இத்தாலி அரசுக்கு பெரும் அவமானமாக கருதப்பட்டது. இந்நிலையில், அவன் மீண்டும் பிடிபட்டதால், தங்கள் நாட்டிற்கு அவனை அழைத்து செல்லும் முயற்சியில் பிரான்ஸ் அதிகாரிகளுடன் தொடர்பில் உள்ளனர்.

# ஒரு வருஷத்துக்கு ரூ.1869 கோடி சம்பளம்

## தமிழர்களுக்கு பெருமை சேர்த்த மதுரை இளைஞர் சுந்தர்பிச்சை





**அமெரிக்கா : பிப். 5,**

**இந்தியர்கள் இந்தியா மட்டும் இல்லாமல் பல உலக நாடுகளின் பெரிய நிறுவனங்கள், அரசு பணிகள், நிறுவனத்தின் தலைமை பொறுப்புகளில் இருக்கின்றனர். அவர்களுக்கான மதிப்பும் மரியாதையும் உலக அளவுகளில் பேசப்படுகின்றன. அப்படி வெளி நாடுகளில் வேலை செய்யும் இந்தியர்கள், மற்றும் இந்திய வம்சாவளிகளில் அதிக சம்பளம் வாங்குபவர் யார் என்று தெரியுமா.**

இப்போது அதற்கான விடையையும் அவர் பற்றிய கதைகளையும் அவரது உலக மதிப்பையும்தான் உங்களுக்கு சொல்ல இருக்கிறோம். வெளி நாடுகளில் வேலை செய்யும் இந்தியர்கள், மற்றும் இந்திய வம்சாவளிகளில் அதிக சம்பளம் வாங்குபவர் ஒரு தமிழர் என்று சொன்னால் நம்புவீர்களா? உண்மை தான் உலகின் தலைசிறந்த தேடுபொறியாக இருக்கும் கூகுள் நிறுவன சி.இ.ஓ சுந்தர் பிச்சைதான் அந்த பெருமைக்கு உரியவர். தமிழ்நாட்டைச் சேர்ந்த இவர் உலகின் பணக்கார நிர்வாகிகளில் ஒருவராக திகழ்கிறார். 1 டிரில்லியன் டாலர்களுக்கு மேல் சந்தை இருப்பை கொண்ட ஒரு நிறுவனத்தை அவர் வழிநடத்துகிறார் என்றால் தனி கெத்து தானே! அவர் அமெரிக்காவில் வாழும் இந்திய வம்சாவளி.

சுந்தர் பிச்சை மதுரையில் பிறந்தவர். அவரது தாயார் லட்சுமி ஒரு ஸ்டெனோகிராபர். இவருடைய தந்தை ரெகுநாத பிச்சை ஒரு மின் பொறியாளர். மதுரையில் பள்ளி படித்த இவர், ஐஐடி காரக்பூரில் உலோகவியலில் பொறியியல் படித்தார். அவர் தனது படிப்பில் கவனமாக இருந்து பாடங்களில் வெள்ளிப் பதக்கம் வென்றவர். பின்னர் ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகத்தில் பொருள் அறிவியலில் எம்.எஸ். பின்னர் வார்டன் பள்ளியில் எம்பிஏ படித்தார். 2004 ஆம் ஆண்டு கூகுளில் தயாரிப்பு மேலாளராக சேர்ந்தார். கூகுள் குரோம் உருவாக்கத்தில் முக்கியப் பங்காற்றினார். 2008 இல், அவர் துணைத் தலைவர் பதவிக்கு மாற்றப்பட்டார். நான்கு ஆண்டுகளுக்குப்பிறகு, கூகுள் நிறுவனத்தின் மூத்த துணைத் தலைவரானார். 2014 இல், அவர் தயாரிப்பு தலைவரானார். பின்னர், 2015 இல் Google இன் CEO ஆனார்.

அது மட்டும் இல்லாமல் 2019 இல், கூகுள் நிறுவனத்தில் தாய் நிறுவனமான Alphabet Inc இன் CEO ஆனார். கல்லூரி படிக்கும் போது அஞ்சலியை சந்தித்து காதலித்து திருமணம் செய்து கொண்டார். அவள் கோட்டாவைச் சேர்ந்தவர். ஐஐடி காரக்பூரில் கெமிக்கல் இன்ஜினியரிங் படிக்கும்போது தான் இருவருக்கும் காதல் மலர்ந்துள்ளது. பிச்சை தலைமை நிர்வாக அதிகாரி ஆவதற்கு முன்பு, பல நிறுவனங்கள் அவரை தங்கள் நிறுவங்கங்களுக்கு ஈர்க்க விரும்பின. இருப்பினும் கூகுளில் இருந்து விலக வேண்டாம் என அவரது மனைவி கேட்டுக் கொண்டாராம். அதனால் தான் இப்போது இந்த நிலையில் இருக்கிறார். மேலும் அவரை பற்றி பார்த்தால், அவர் ஒரு கிரிக்கெட் விரும்பி.

இவ்வளவு பெரிய பதவியில் இருக்கும் சுந்தர் பிச்சையின் சம்பளம் மற்றும் சொத்து மதிப்பு என்று பார்க்கும்போது, 2022ல் சுந்தர் பிச்சையின் சம்பளம் 226 மில்லியன் டாலர்கள். இதன் இந்திய ரூபாய் மதிப்பு சுமார் ரூ.1869 கோடியாம். இந்தத் தொகையில் 218 மில்லியன் டாலர் மதிப்புள்ள பங்கு விருப்பத் தொகையும் அடங்கும். அதாவது கூகுள் நிறுவனத்தில் 218 மில்லியன் டாலர் மதிப்பிலான பங்கு சுந்தருடையது.

இவை மட்டும் இல்லாமல் 2019 ஆம் ஆண்டில், அவர் 281 மில்லியன் டாலர்கள் பரிசுத் தொகையாக பெற்றார். ஹுருன் பட்டியலின்படி, 2022 இல் அவரது நிகர மதிப்பு 1310 மில்லியன் டாலர்கள் அல்லது ரூ.10215 கோடி. அவரது வீடு மட்டும் 4,429 சதுர அடி பரப்பளவில் ரூ.10,215 கோடி மதிப்பிலானதாக இருக்கிறது.

# அவசர நிலை பிரகடனம்

## சிலி நாட்டில் பயங்கர காட்டுத்தீ 46 பேர் பலி



**சாண்டியாகோ : பிப். 5,**

**தென் அமெரிக்கா நாடான சிலியில் மத்திய பகுதியில் பயங்கர காட்டுத் தீ பரவி வருகிறது.**

கடலோர நகரமான வினாடெல்மாரை சுற்றியுள்ள மலைப் பகுதிகளில் காட்டுத் தீ ஏற்பட்டது. தீ வேகமாக மற்ற இடங்களிலும் பரவியது. எஸ்ட்ரெல்லா, நவிடாப் உள்ளிட்ட நகரங்களில் காட்டுத்தீயால் ஏராளமான வீடுகள் எரிந்து நாசமானது. அதே போல் நாட்டின் தெற்கு பகுதியிலும் காட்டுத் தீ பரவியுள்ளது.

கொளுந்து விட்டு எரியும் காட்டுத் தீயால் அங்கு கரும் புகை மண்டலம் ஏற்பட்டு உள்ளது. அப்பகுதிகளில் இருளில்சூழ்ந்ததுபோல்புகை மண்டலம் பரவி உள்ளது. இதனால் பொதுமக்கள் கடும் அவதியடைந்துள்ளனர். அவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப் படுகிறார்கள்.

காட்டுத்தீயை கட்டுப்படுத்தும் பணியில் தீயணைப்பு வீரர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள். விமானங்கள் மூலம் தண்ணீர் ஊற்றப்பட்டு வருகிறது. ஆனாலும் காட்டுத்தீ பயங்கரமாக எரிந்து வருகிறது. இதனால் தீயணைப்பு வீரர்கள் கடுமையாக போராடி வருகிறார்கள். இந்நிலையில் காட்டுத் தீயில் சிக்கியும், புகை மூட்டத்தால் மூச்சு திணறியும் 46 பேர் பலியாகி உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இதில் பலரது உடல்கள் சாலைகளில் சிதறி கிடந்தன.

தொடர்ந்து காட்டுத்தீ பரவி வருவதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது. மேலும் வெப்பநிலை 104 டிகிரி வரை உள்ளதால் வரும் நாட்களில் காட்டுத்தீ இன்னும் மோசமடைய வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது. இதையடுத்து சிலியில் அவசர நிலையை அந்நாட்டு அதிபர் கேப்ரியல் போரிக் அறிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறும்போது, நாட்டின் மத்திய மற்றும் தெற்கு பகுதிகளில் காட்டுத் தீ பேரழிவு காரணமாக 40-க்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர்.

லால்பரைசோ பிராந்தியத்தில் நான்கு இடங்களில் காட்டுத்தீ பயங்கரமாக எரிந்து வருகிறது. தீயை அணைக்க வீரர்கள் கடுமையாக போராடி வருகிறார்கள். மீட்புப் பணியாளர்களுக்கு ஒத்துழைக்குமாறு மக்களை கேட்டுக் கொள்கிறேன். தீ வேகமாக முன்னேறி வருகிறது. கால நிலை, காரணமாக தீயை கட்டுப்படுத்துவது கடினமாக உள்ளது என்றார். இந்த காட்டுத்தீயில் 19 ஆயிரத்து 770 ஏககர் வனப்பகுதி எரிந்து நாசமாகிஉள்ளது. 1000-க்கும் மேற்பட்ட வீடுகள் தீயில் முற்றிலும் எரிந்தன.

# உக்ரைன் குண்டுவீச்சு தாக்குதலில் குறைந்தது 20 பேர் பலி : ரஷியா தகவல்



**மாஸ்கோ : பிப். 5,**


**கிழக்கு ஆக்கிரமிப்பு நகரமான லிசிசான்ஸ்க் மீது உக்ரைன் நடத்திய குண்டுவீச்சு தாக்குதலில் குறைந்தது 20 பேர் பலியாகினர்.**

உக்ரைன் மற்றும் ரஷியா ஆகிய நாடுகளுக்கு இடையிலான பதற்றம் நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருகிறது. இந்நிலையில் உக்ரைன் அரசுக்கு எதிரான கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் கிழக்கு உக்ரைன் பகுதியான லிசிசான்ஸ்க் நகர் மீது உக்ரைன்நடத்தியகுண்டுவீச்சு தாக்குதலில் குறைந்தது 20 பேர் பலியாகினர். மேலும் 10 பேர் காயமடைந்துள்ளனர். தற்பொது அங்கு மீட்பு நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்றுவருவதாக ரஷியா தெரிவித்துள்ளது.

மாஸ்கோவின் ஆக்கிரமிப்புப் படைகள், வார இறுதி நாட்களில் பிரபலமான ஒரு பேக்கரியை உக்ரைன் குறிவைத்ததாகக் கூறியது. லிசிசான்ஸ்க் நகரில் ரஷிய அவசர அமைச்சகத்தின் ஊழியர்கள், இடிபாடுகளுக்கு அடியில் இருந்து 20 பேரின் உடல்களை மீட்டனர் என்று அமைச்சகம் தனது டெலிகிராமில் தெரிவித்துள்ளது. இடிபாடுகளுக்கு அடியில் இருந்து தப்பிய 10 பேரை வெளியே எடுத்துள்ளதாகவும், மீட்பு பணிகள் இரவு வரை தொடரும் என்றும் அமைச்சகம் கூறியது.

சுமார் 1,10,000 மக்கள்தொகை கொண்ட லுகான்ஸ்க் பிராந்தியத்தில் உள்ள லிசிசான்ஸ்க் நகரம், 2022ம் ஆண்டு ஒரு கொடூரமான போருக்குப்பிறகு ரஷியப் படைகளிடம் வீழ்ந்தது குறிப்பிடத்தக்கது.

# உடல்நலக் குறைவால் நமீபியா அதிபர் மரணம்



**விண்ட்ஹொக் : பிப். 5,**

**புற்றுநோய்க்கு சிகிச்சை பெற்றுவந்த நமீபியா அதிபர் காலமானார்.**

தெற்கு ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள நாடு நமீபியா. இந்நாட்டின் அதிபராக ஹஜி ஜிங்கொப் (வயது 82) செயல்பட்டு வந்தார். இதனிடையே, அதிபர் ஹஜி கடந்த மாதம் வழக்கமான மருத்துவ பரிசோதனை செய்தபோது அவரது உடலில் புற்றுநோய் செல்கள் இருப்பது கண்டறியப்பட்டது. இதையடுத்து, தலைநகர் விண்ட்ஹொக்-யில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு புற்றுநோய்க்கான சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில், புற்றுநோயால் பாதிக்கப்பட்ட அதிபர் ஹஜி ஜிங்கொப் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அதிபர் ஹஜி ஜிங்கொப்பின் மறைவிற்கு பல்வேறு தலைவர்களும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். நமீபியா அதிபர் ஹஜி உயிரிழந்த நிலையில் இடைக்கால அதிபராக நங்கொலா முபுமா செயல்பட்டு வருகிறார்.

# ஏமனில் ஹவுதி கிளர்ச்சியாளர்களை குறிவைத்து அமெரிக்கா மீண்டும் தாக்குதல்



**சனா ; பிப். 5,**

**ஹவுதி கிளர்ச்சியாளர்களை குறிவைத்து அமெரிக்கா, இங்கிலாந்து மீண்டும் வான்வழி தாக்குதல் நடத்தியுள்ளன.**

இஸ்ரேல் மீது ஹமாஸ் ஆயுதக்குழுவினர் கடந்த ஆண்டு அக்டோபர் 7ம் தேதி பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இதற்கு பதிலடியாக ஹமாஸ் மீது போர் அறிவித்த இஸ்ரேல், காசா முனையில் தாக்குதல் நடத்தி வருகிறது. இஸ்ரேலுக்கும், ஹமாஸ் ஆயுதக்குழுவுக்கும் இடையேயான போர் 3 மாதங்களுக்கு மேல் நீடித்து வருகிறது.

இந்த போரில் ஹமாஸ் ஆயுதக்குழுவுக்கு ஏமனில் செயல்பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் குழு ஆதரவு அளித்து வருகிறது. மேலும், செங்கடல் வழியாக இஸ்ரேல் மற்றும் இஸ்ரேலின் ஆதரவு நாடுகளுக்கு செல்லும் சரக்கு கப்பல்களை குறிவைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்த தாக்குதலுக்கு பதிலடியாக, ஏமனில் உள்ள ஹவுதி கிளர்ச்சியாளர்களின் நிலைகளை குறிவைத்து அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து வான்வழி தாக்குதல் நடத்தி வருகின்றன. இந்நிலையில், ஏமனில் உள்ள ஹவுதி கிளர்ச்சியாளர்களை குறிவைத்து அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து மீண்டும் வான்வழி தாக்குதல் நடத்தியுள்ளன. ஈரானில் 13 பகுதிகளில் ஹவுதி கிளர்ச்சியாளர்களின் 36 இலக்குகளை குறிவைத்து வான்வழி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்த தாக்குதலால் மத்திய கிழக்கு பகுதியில் பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது.

# அதிபர் வேட்பாளர் தேர்தல் : தெற்கு கரோலினா மாகாணத்தில் ஜோபைடன் வெற்றி



**வாஷிங்டன் : பிப். 5,**

**அமெரிக்க அதிபர் தேர்தல் இந்த ஆண்டு நவம்பர் மாதம் நடைபெறுகிறது. இதில் ஜனநாயக கட்சி சார்பில் மீண்டும் களமிறங்க தற்போதைய அதிபர் ஜோபைடன் திட்டமிட்டுள்ளார்.**

இதையடுத்து அக்கட்சியின் வேட்பாளர் தேர்தலில் போட்டியிடுகிறார்கள். இதில் தெற்கு கரோலினா மாகாணத்தில் நடந்த தேர்தலில் ஜோபைடன் வெற்றி பெற்றார். அவர் டீன் பிலிப்ஸ், மரியன்னே வில்லியம்சன் உள்ளிட்டோரை தோற்கடித்தார். குடியரசு கட்சி சார்பில் முன்னாள் அதிபர் டிரம்ப் போட்டியிடுவது ஏறக்குறைய உறுதியாகிவிட்டது. இதனால் அதிபர் தேர்தலில் மீண்டும் ஜோபைடன்-டிரம்ப் மோத உள்ளனர்.

# பாகிஸ்தான் தேர்தல் : முன்னாள் அமைச்சர் குரேஷி 5 ஆண்டுகள் போட்டியிட தடை



**லாகூர் : பிப். 5,**

**பாகிஸ்தான் முன்னாள் வெளியுறவு மந்திரியாக பதவி வகித்தவர் ஷா மஹ்மூத் குரேஷி. பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாப் கட்சி துணைத் தலைவராக உள்ளார்.**

முன்னாள் பிரதமர் இம்ரான்கான் அமைச்சரவையில் 2018 முதல் 2020 வரை வெளியுறவுத்துறை மந்திரி உள்பட பல்வேறு பதவிகளை வகித்துள்ளார். சைபர் கிரைம் வழக்கு தொடர்பாக போலீசாரால் கைது செய்யப்பட்ட மஹ்மூத் குரேஷி, சிறப்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு அடியாலா சிறையில் அடைக்கப்பட்டார். பாகிஸ்தான் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டதில் அவருக்கு ஜாமீன் கிடைத்தது. அடியாலா சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட நிலையில், மீண்டும் அவர் கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில், பாகிஸ்தான் தேர்தல் ஆணையம் ஷா மெஹ்மூத் குரேஷியை 5 ஆண்டுக்கு தேர்தலில் போட்டியிட தகுதிநீக்கம் செய்துள்ளது. பாகிஸ்தானில் வரும் 8-ம் தேதி தேர்தல் நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் போட்டியிட முடியாதபடி 5 ஆண்டுகளுக்கு தடை செய்யப்பட்டுள்ளார். சைபர் கிரைம் வழக்கில் சிறப்பு நீதிமன்றத்தால் குரேஷியின் தண்டனைக்குப் பிறகு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

குரேஷி மற்றும் அவரது மகன் ஜெய்ன் குரேஷி ஆகியோரின் வேட்பு மனுக்கள் தேர்தல் அதிகாரியால் நிராகரிக்கப்பட்டன. முல்தான் உள்ளிட்ட 2 சட்டமன்றத் தொகுதியில் வேட்பாளராக போட்டியிட அவர் மனு தாக்கல் செய்திருந்தார். அவரது மனு தேர்தல் அதிகாரிகளால் நிராகரிக்கப்பட்டது. அவருக்கு பதிலாக அந்தஇடத்தில் மாற்று வேட்பாளர் நிறுத்தப்பட்டார்.

# இருளில் வாழும் மக்களுக்கு ஒளி வழங்கும் உயர்ந்த உள்ளம்



**பிரிட்டன் : பிப். 5,**

**கடந்த 2022 பிப்ரவரி மாதம், உலக வல்லரசு நாடுகளில் ஒன்றான ரஷியா, தனது அண்டை நாடான உக்ரைனை "சிறப்பு ராணுவ நடவடிக்கை" எனும் பெயரில் ஆக்கிரமித்தது. இதைஎதிர்த்து உக்ரைன், அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளின் பொருளாதார மற்றும் ராணுவ உதவியுடன் போரிட்டு வருகிறது.**

இரு தரப்பிலும் உயிர்சேதங்களும், கட்டிட சேதங்களும் பலமாக ஏற்பட்டிருந்தும், போர் தீவிரமாக 710 நாட்களை கடந்து தொடர்கிறது. ரஷியாவின் வான்வழி தாக்குதலால் உக்ரைன் நாட்டில் சுமார் 40 சதவீத மின் உற்பத்தி நிலையங்கள் சேதமடைந்தன. இதனால் உக்ரைனின் பல பகுதிகளில் மக்கள் மின்சாரம் இன்றி தவித்து வருகின்றனர்.

உதவிகள் கேட்டு அமெரிக்க அதிபரை சந்தித்த உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலன்ஸ்கி, தங்கள் நாட்டு மின்சார உற்பத்தி நிலையங்களை இயங்க செய்யவும் அமெரிக்க உதவியை கேட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. இங்கிலாந்தின் கேம்பிரிட்ஜ் நகரத்தில் இருந்து சிறிது தொலைவில் உள்ளது சாஸ்டன் கிராமம்.

சாஸ்டன் பகுதியில் உள்ள செயின்ட் மேரி தேவாலயத்தில் பாதிரியாராக இருப்பவர், 29 வயதான வில் லயான் டுப்மேன். உக்ரைன் மக்கள் இருளில் அவதிப்படுவதை கேள்விப்பட்டு 2022லிருந்தே பாதிரியார் டுப்மேன், பாதி உபயோகப்படுத்தப்பட்ட நிலையில் உள்ள மெழுகுவர்த்திகளை சேகரிக்க தொடங்கினார்.

தங்கள் தேவாலயத்திலும் இருந்த பயன்படுத்தப்படாத மெழுகுவர்த்திகளையும் தனது சேகரிப்பில் இணைத்தார். மேலும், இவரது கோரிக்கைக்கு உதவ பலர் முன் வந்ததால், தங்கள் வீட்டில் இருந்த பாதி எரிந்த நிலையில் உள்ள மற்றும் உபயோகப்படுத்தாத மெழுகுவர்த்திகளையும் அவரிடம் வழங்கினர். இவையனைத்தையும் பாதிரியார் டுப்மேன், அங்குள்ள ஒரு மெழுகுவர்த்தி உற்பத்தி நிலையத்தில் கொடுத்து, உருக்கி, புது மெழுகுவர்த்திகளாக மாற்றினார். அந்த புது மெழுகுவர்த்திகளை உக்ரைன் நாட்டிற்கு அனுப்பி வைத்தார்.

இந்த அரிய பணியை, பாதிரியார் டுப்மேன் தற்போது வரை தொடர்கிறார். இவரது முயற்சிக்கு அப்பகுதி மக்களிடம் இருந்தும், சுற்று வட்டாரப்பகுதிகளில் உள்ள சர்ச்களிலில் இருந்தும் ஆதரவு பெருகி வருகிறது. உக்ரைன் மக்கள் டுப்மேனின் இந்த பெரும் உதவியினால் பயனடைந்துள்ளதால், அவருக்கு நன்றி தெரிவித்து வருகின்றனர்.

# தேச விரோத செயல்களில் நாம் தமிழர் கட்சியினர் ஈடுபட்டதை என்ஐஏ சோதனை காட்டுகிறது





# பா.ஜ.க. இல்லாத மற்ற கட்சிகளுடன் தேர்தல் கூட்டணி ஜெயக்குமார்

# அமலாக்கத்துறை என் வீட்டு கதவை தட்டவே வேண்டாம் அண்ணாமலைக்கு அமைச்சர் துரைமுருகன் பதிலடி




சென்னை / புதுக்கோட்டை | 05.02.2024 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

**வி. தர்மலிங்கம்** , இலங்கைத் தமிழ் அரசியல்வாதி (பி.1918) (இ.1985)



**இரா. சம்பந்தன்** , இலங்கைத் தமிழ் அரசியல்வாதி (பி.1833)



**கிறிஸ்டியானோ ரொனால்டோ** , போர்த்துக்கீசக் கால்பந்து வீரர் (பி.1985)



## இன்றைய நினைவு நாள்

**மு. கா. சித்திலெப்பை** , இலங்கைத் தமிழறிஞர் (பி.1838) (இ.1898)



**டி. ஜி. லிங்கப்பா** , தென்னிந்தியத் திரைப்பட இசையமைப்பாளர் (பி.1927) (இ.2000)



**மகேஷ் யோகி** , இந்திய ஆன்மிக குரு (பி.1918) (இ.2008)



**மா. செங்குட்டுவன்** , தமிழகக் கவிஞர், எழுத்தாளர், இதழாளர் (பி.1928) (இ.2021)



**காஷ்மீர் ஒருமைப்பாடு நாள் (பாக்கித்தான்)**